JAFFNA

ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

14.10.2015 - மலர் 12, இதழ் 33













மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. இதுவொரு;

    1. விளையாட்டுப்பொருட்கள் விற்பனை நிலையம்
    2. பழங்கள், காய்கறிகள் கடை
    3. சிற்றுண்டிச்சாலை

2. குழந்தையைத் தூக்கிக்கொண்டிருக்கும் தாயின் கையில் இருக்கும் பழ வகை யாது?

..............................................................................

3. வெளியே மழை பொழிகின்றது. படத்தின்படி, எந்தக் காரணங்களை வைத்து அதனை உறுதிப்படுத்தலாம்?

..............................................................................


4. படத்தில் கடிகாரம் காட்டும் நேரம் யாது?

..............................................................................

1. அந்தந்தப் படங்களுக்குரிய பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.
2. வான்வழிப் பயணத்திற்கு உதவுபவை எவை?

..............................................

| | | | |
|---|---|---|---|
| airplane | motorcycle | lorry | train |
| helicopter | car | bus | ship |





3. குறைந்தளவிலானோர் பயணிக்கக்கூடிய போக்குவரத்து சாதனம் எது?

..............................................

4. தரைவழிப் பயணத்தில் ஈடுபடக்கூடியவை எவை? ..............................................

இங்கிருக்கும் சொற்றொடர்களை பொருத்தமான கட்டங்களுக்குள் எழுதுக.

* இரவு வணக்கம் அம்மா
* மாலை வணக்கம் சேர்
* ஹலோ கமல், எப்போதிருந்து கண்ணாடி அணிவது?
* எனக்கும் அப்படியே ஜெனீ
* காலை வணக்கம்
* இரவு வணக்கம் மகன்
* ஹலோ ஜோன், நேற்றுத்தான் வாங்கினேன்
* சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி மாமி
* மதிய வணக்கம் டேவிட்






1. இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிவங்களைக் குறிப்பிடுக.


..............................................

2. என்னென்ன வடிவங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் உள்ளன?

..............................................

3. வீட்டின் கதவில் கபில நிறம் தீட்டுக.
4. ஜன்னல்களைக் குறிக்கும் வடிவங்கள் யாவை?

..............................................



-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூச்ச சுபாவம்

## உங்கள் முன்னேற்றத்திற்கு தடையாக அமையும்!

**திறமைகள் இருந்தும் சிலர் தோற்றுப் போவதற்குக் காரணம், அவர்களிடம் காணப்படும் கூச்ச சுபாவம்தான். கூச்ச சுபாவம், தயக்கம் எதுவும் இல்லாமல் இருந்தால்தான் வாழ்க்கையில் உயர்ந்த இடத்துக்குச் செல்ல முடியும்.**

பிறக்கும்போதே கூச்ச சுபாவத்துடன் யாரும் பிறப்பது இல்லை. கூச்ச சுபாவம் என்பது ஒருவகையில் பலர் தங்களின் சௌகரியத்துக்காக தாமே வளர்த்துக்கொள்ளும் ஒரு குணம் ஆகும் என மனோதத்துவ நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது, மற்றவர்கள் தம்மைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டும், கருணையாகப் பார்க்க வேண்டும் என்று உள்ளுக்குள் விரும்பியே பலரும் கூச்ச சுபாவத்தை தம்முள் வளர்த்துக்கொள்கிறார்கள். ஆனால், பின்னாளில் அதுவே, அவர்களின் வளர்ச்சிக்குத் தடையாகவும் அமைந்துவிடுகின்றது. ஏனெனில், கூச்ச சுபாவமானது, நாளடைவில் பயமாக மாறிவிடுகின்றது. அவ்வாறு பயந்து ஒதுங்கும்போது, எம்மில் மற்றவர்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்குவார்கள். இந்த பின்னடைவானது, நமக்குள் இருக்கும் திறமைகளை மறைத்துவிடுகின்றது.

கூச்சப்படுபவர்களால் தங்களின் அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற வாழ்க்கையை அடைய முடியாது என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. பெற்றோரின் அதிகப்படியான பாதுகாப்பும், அக்கறையும்கூட ஒருவருக்கு கூச்ச உணர்வை ஏற்படுத்திவிடும். பெற்றோர்கள் தமது பிள்ளையை எதற்கெடுத்தாலும் குறை-குற்றம் காணும்போதும் எதையும் செய்யவிடாமல் அடக்கிவைக்கும் போதும் பிள்ளைகளிடையே மன தைரியம் இல்லாமல் போய்விடுகிறது.

பிள்ளைகளை எந்தக் காரியத்தையும் சுயமாக செய்யவிடாமல் தடுத்து, பெற்றோர்களே செய்து முடிப்பதானது, ஆபத்தான வளர்ப்பு முறையாகும். இதனால், எந்தக் காரியத்தையும் துணிச்சலாகச் செய்யும் தைரியம் பிள்ளைகளுக்குள் வளராமலேயே போய்விடும்.


அத்தகைய பிள்ளைகள் பொருட்களைப் பேரம் பேசி வாங்க முடியாமல் இருப்பார்கள். சாலையைக் கடக்கத் தெரியாமல் தடுமாறுவார்கள். கல்லூரிக்குச் செல்லும்போது, பெற்றோர் இல்லாமல் எதையும் சந்திக்கப் பயப்படுவார்கள். 'எதிரில் இருப்பவர் நம்மைவிடச் சிறந்தவர்' என்கிற எண்ணம் எழுந்து, தாழ்வு மனப்பான்மை வந்துவிடும். தன்னம்பிக்கையே இருக்காது. யாரையும் சந்திக்க, எதிர்கொள்ளப் பயப்படுவார்கள். பெரும்பாலும் சந்திப்புகளைத் தவிர்ப்பார்கள். ஆக, இவை அனைத்திற்கும் பிரதான காரணம் கூச்ச சுபாவமாகும்.

எனவே, கூச்ச சுபாவத்தைப் போக்க அதிகமான பயிற்சிகளைச் செய்ய வேண்டும். அந்தவகையில் யாரையாவது சந்திக்கச் செல்வதற்கு முன், என்ன பேச வேண்டும்?, எப்படிப் பேச வேண்டும்?, அவர் இப்படிப் பதில் சொன்னால், அடுத்து எப்படிப் பேச்சைக் கொண்டுசெல்வது? என்று உங்களுக்குள்ளேயே முன்னாயத்தங்களைச் செய்ய வேண்டும். அத்துடன், எதையும் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். அப்போது பயம், பதற்றம் வராது. அவ்வாறே யாரையும் சந்திக்கச் செல்லும்போதோ அல்லது மேடையில் ஏறும்போதோ, நமக்கு முன் இருப்பவர்கள் நம்மைப்போல் சராசரி மனிதர்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இப்படி தொடர் பயிற்சிகள் எடுக்கும்போது கூச்ச சுபாவம் காணாமல் போய்விடும்.



பிறக்கும்போதே கூச்ச சுபாவத்துடன் யாரும் பிறப்பது இல்லை. கூச்ச சுபாவம் என்பது ஒருவகையில் பலர் தங்களின் சௌகரியத்துக்காக தாமே வளர்த்துக்கொள்ளும் ஒரு குணம் ஆகும்





விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு கொடுத்த தண்டனை

ஒரு ஊரில் ஒரு சோம்பேறி வாழ்ந்து வந்தான். அவனுக்கு உழைக்கவேண்டும் என்ற எண்ணம் வந்ததே இல்லை. ஒருநாள் எந்த வேலையும் செய்யாமல் சுலபமாக எப்படி சம்பாதிக்கலாம் என அவன் யோசித்துக்கொண்டிருக்கும்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

அதன்படி திருடிச் சம்பாதிக்கலாம் என அவன் முடிவு செய்தான். முதல்நாள் திருடக் கிளம்புவதற்குள் அவனை சோம்பல் ஆட்கொண்டது. திருடுவதற்குக்கூட அவனது சோம்பேறித்தனம் இடம்கொடுக்கவில்லை. வெகு நேரம் கழித்து ஒரு குரங்கைப் பிடித்து அதற்குப் பயிற்சி கொடுத்து அதைத் திருடி வரச்சொல்லலாம் என முடிவு செய்தான்.



அதன்படி, கஷ்டப்பட்டு ஒரு குரங்கைப் பிடித்துவந்து அவன் அதற்குத் திருடப் பயிற்சி அளித்தான். குரங்கிற்கு பயிற்சி முடிந்ததும் முதல்தடவையாக அக்குரங்கை திருட அனுப்பினான். முதல் முறையாக திருடச் சென்ற குரங்கு, அந்த ஊரின் செல்வந்தர் வீட்டிற்கு சென்று விலை மதிக்க முடியாத ரத்தினங்கள் பதித்த மோதிரம் ஒன்றை திருடிக்கொண்டு வந்து சோம்பேறியிடம் கொடுத்தது.

அதிக மதிப்புள்ள அந்த திருட்டு மோதிரத்தை பார்த்த சோம்பேறி சந்தோஷத்தில் குதித்தான். தான் பயிற்சி கொடுத்த குரங்கு அதிக மதிப்புள்ள பொருளை திருடியதில் அவனுக்கு பேரானந்தம். அந்த மோதிரம் மட்டும்தான் அவன் கண்களுக்கு தெரிந்தது. விரைவில் இந்த குரங்கை வைத்து பெரிய பணக்காரன் ஆகிவிடலாம் என கனவுக் கோட்டை கட்டினான்.

பின்விளைவுகளை பற்றி சிறிதும் யோசிக்காமல் உடனடியாக அந்த மோதிரத்தை கையில் அணிந்து கொண்டு ஊர் மக்கள் அனைவருக்கும் பெருமையாகக் காண்பித்தான்.

செல்வந்தரின் மோதிரம் திருட்டுப் போனதை அறிந்த ஊர்மக்கள், அந்த சோம்பேறியைப் பிடித்து செல்வந்தரின் வீட்டிற்கு அழைத்து சென்றனர்.

மோதிரத்தை திருடியதோடு நில்லாமல், அதனை தைரியமாக ஊர் மக்களிடம் காட்டியதை அறிந்த செல்வந்தர் அவனுக்கு காலம் முழுக்க செல்வந்தரின் வீட்டில் சம்பளம் இல்லாமல் வேலை செய்ய வேண்டுமென்று தண்டனை அளித்தார்.

சோம்பேறியாக காலம் தள்ளிய அவனுக்கு சம்பளம்கூட இல்லாமல் வேலைசெய்யும் தண்டனை அளிக்கப்பட்டதை நினைத்து அந்த சோம்பேறி மனம் வருந்தினான்.

# சோதனையை வெல்

ஒரு ஊரில் சலவைத் தொழிலாளி ஒருவன் இருந்தான். அவனிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. அதற்கு வயதாகிப் போனதால் பொதி சுமக்கச் சிரமப்பட்டது. நடக்கவும் சிரமப்பட்டது. ஒருநாள் தொழிலாளி தன் கழுதையுடன் சென்றுகொண்டிருந்தபோது கழுதை வழியில் இருந்த பாழடைந்த கிணற்றுக்குள் தவறி விழுந்துவிட்டது.



எப்படியாவது அந்தக் கழுதையைத் தொலைத்துவிட நினைத்திருந்த தொழிலாளி இதுதான் சமயமென்று நினைத்தான். கழுதையை மேலே தூக்கிவிடாமல் அப்படியே கிணற்றில் புதைத்துவிடுவோம் என நினைத்து அருகில் இருந்தவர்களை அழைத்தான். இக்கழுதையை இதற்குள் வைத்து அப்படியே புதைக்க வேண்டும் என்று கூறினான். இதனால் எல்லோருமாகச் சேர்ந்து மண்வெட்டியின்மூலம் அருகிலிருந்த மண்ணை வெட்டிக் கிணற்றுக்குள் தள்ளினர்.

ஆரம்பத்தில் தன்மீது விழும் மண்ணைக் கண்டு திகைத்த கழுதை பின்பு சுதாகரித்துக்கொண்டது. தனக்கு நேரும் துன்பத்தை எண்ணி வருந்திக் கொண்டிருந்தால் பயனில்லை. ஏதாவது செய்து தப்பிக்க வேண்டும் என நினைத்தது. தன்மீது விழும் மண்ணை உடம்பைச் சிலிர்த்து உதறியபடியே அந்த மண்ணையே தனக்கு படிக்கல்லாக்கிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அடி எடுத்து வைத்து வெளியே வர முயற்சித்தது. மேலே இருந்தவர்களும் மண்ணை வெட்டிப் போட்டுக்கொண்டேயிருந்தனர். தப்பிக்க வேண்டுமென்ற குறிக்கோளே பிரதானமாக இருந்ததால் கழுதையும் வேகமாக மண்ணை உதறிவிட்டபடி மண்ணின் மேல் ஏறி வெளியே வந்துவிட்டது. தொழிலாளியும் கழுதையின் விடாமுயற்சியைப் பார்த்து வியந்து மனமிரங்கி மீண்டும் தன்னுடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தான்.

# பொறுப்பு

ஒரு ஊரில் வயதான தம்பதியர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஐந்து மகன்கள். அவர்கள் அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. ஐந்து மருமகள்களும் அந்தப் பெரிய வீட்டில் ஒரே கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தனர். குடும்பத் தலைவிக்கு வயதாகிவிட்டதால் நோயும் நிறைய வந்துவிட்டது. அதனால் அந்தப் பெரிய குடும்பத்தின் நிர்வாகப் பொறுப்பை, யாராவது ஒரு பொறுப்புள்ள மருமகளிடம் ஒப்படைக்க நினைத்தாள். ஐந்து மருமகள்களில் யாரிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைப்பது என்ற குழப்பம். யோசித்தாள். ஒரு நல்ல யோசனை ஒன்று தோன்றியது.

ஒருநாள் ஐந்து மருமகள்களையும் அழைத்து, ஆளுக்கு ஒரு படி வேர்க்கடலையைக் கொடுத்தாள். "மருமகள்களே! ஆறு மாதம் சென்ற பின்னர் இந்த வேர்க்கடலைகளைக் கேட்பேன் கொண்டுவந்து தரவேண்டும்!" என்றாள். மருமகள்களும் அதற்கு ஒப்புக்கொண்டனர். ஆறுமாதம் சென்றது. குடும்பத் தலைவி தனது ஐந்து மருமகள்களையும் அழைத்து, தான் கொடுத்த வேர்க்கடலைகளைத் திருப்பிக் கேட்டாள்.

"ஆறு மாதம் வேர்க்கடலையை வைத்திருந்தால் புழுத்துப் போகாதா? அதனால் அதை உடனே வறுத்து, குடும்பத்தோடு சாப்பிட்டு விட்டோம்!" என்றாள் மூத்த மருமகள்.



"நீங்கள் கொடுத்த வேர்க்கடலையை அப்படியே ஓர் அடுக்குப் பானைக்குள் போட்டு வைத்திருந்தேன். நீங்கள் கேட்கும்போது இதைத் திருப்பிக் கொடுப்பதுதானே மரியாதை. இந்தாருங்கள்!" என்று அந்த ஒருபடி வேர்க்கடலையைத் திருப்பிக் கொடுத்தாள் இரண்டாவது மருமகள்.

"ஓர் ஏழைக் குடும்பம் பசியால் துடித்துக்கொண்டிருந்தது. அதைப் பார்க்க மனம் பொறுக்கவில்லை ஆகவே, அவர்கள்மீது இரக்கப்பட்டு ஒருபடி வேர்க்கடலையையும் அவர்களுக்கு கொடுத்து விட்டேன்!" என்றாள் மூன்றாவது மருமகள். "ஊரிலிருந்து என் பெற்றோர் வந்திருந்தனர். அவர்களிடம் தம்பி, தங்கைகளுக்குக் கொடுக்கும்படி கூறிக் கொடுத்து அனுப்பிவிட்டேன்!" என்றாள் நான்காவது மருமகள்.

ஐந்தாவது மருமகள் இரண்டு ஆட்களின் துணையோடு ஒரு மூட்டை வேர்க்கடலையைக் கொண்டுவந்து தன் மாமியாரின் முன்னே போட்டாள்.

"அத்தை! நீங்கள் கொடுத்த வேர்க்கடலையை ஆறு மாதங்கள் அப்படியே வைத்திருப்பதால் என்ன பயன்... என்ன லாபம்...? என்று யோசித்தேன். என் தந்தையின் வீட்டுத் தோட்டத்தில் விதைத்தால் ஒன்றுக்குப் பத்தாக விளைந்து லாபம் கிடைக்குமே என்று நினைத்தேன். நிலத்தைப் பண்படுத்தி ஒருபடி வேர்க்கடலையையும் விதைத்தேன். இந்த ஆறு மாதத்தில் அது ஒரு மூட்டை வேர்க்கடலையாகப் பெருகிவிட்டது. இந்தாருங்கள்!" என்றாள். அதைக் கண்ட மாமியார் மகிழ்ந்து போனாள்.

பெரிய குடும்பத்தை நிர்வகிக்கும் தகுதியும், பொறுப்பும் அவளுக்கே உண்டு என்று தீர்மானித்தாள். உடனே பொறுப்பை ஐந்தாவது மருமகளிடம் ஒப்படைத்தாள். அதை மற்ற நான்கு மருமகள்களும் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களைத் தடுக்கும் சமிக்ஞைகளும் ஒழுங்குகளும்!






எமது போக்குவரத்துக்களை இலகுபடுத்துவது பெருந்தெருக்களே என்பது அனைவரும் அறிந்ததே. வீதிகளில் பயணிக்க அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், தமது சுய விருப்பப்படி வீதிகளைப் பயன்படுத்த எவருக்கும் உரிமை இல்லை. ஏனெனில், வீதி விபத்துக்களுக்கே அது வழிவகுக்கும். ஆகையால் வீதி சமிக்ஞைகளை பின்பற்றுவதன்மூலம் உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்தவகையில் வீதிகளில் உள்ள வீதி சமிக்ஞைகள் மற்றும் வீதிச் சட்டங்கள் பற்றி சற்று இங்கு ஆராய்வோம்..



## எம்மைப் பாதுகாக்கும் உற்ற தோழன்

வீதி சமிக்ஞைகளும், வீதி ஒழுங்குகளும் எம்மைப் பாதுகாக்கும் உற்ற தோழர்களாகும். இவற்றைப் பின்பற்றுவது எமது கடமையாகும். சட்டத்தினைப் பின்பற்றி வாழ்பவர்கள் வீதி ஒழுங்குகளையும் சரிவரப் பின்பற்றுவார்கள். வீதி ஒழுங்குகளுக்குட்பட்டு சரியான முறையில் சட்டங்களைப் பின்பற்ற நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

## பாதசாரிகளுக்கான விதிகள்...

பெருந்தெருக்களில் நடந்து செல்பவர்களே பாதசாரிகளாவர். பாதசாரிகள் வீதியில் செல்லும்போது பின்பற்ற வேண்டிய பல விதிமுறைகள் உள்ளன. இந்த விதிமுறைகளைப் பின்பற்றுவதன்மூலம் எமது பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

எப்பொழுதும் வீதியின் வலது பக்கமாகவே நடக்க வேண்டும். (பாதசாரிகள் வலது பக்கமாக நடக்க வேண்டும் என்பது சட்டமாகும்) வீதியின் வலது பக்கமாக நடக்கும்போது வாகனங்களை செலுத்துபவர்களுக்கு வீதியில் நடந்து வருபவர்களை தெளிவாகக் காண முடியும். அதேபோல் நடந்து செல்பவர்கள் எதிரே வரும் வாகனங்களை நேர் எதிரே காணவும் முடியும். இதனால், விபத்துக்கள் தவிர்க்கப்படும்.

கூட்டமாக சேர்ந்து உரையாடிக்கொண்டு வீதியின் குறுக்காக நடப்பது தவறானதாகும். பாதசாரிகள் தமக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒழுங்கைகளை அல்லது அதற்குரிய பாதைகளைப் பின்பற்ற வேண்டும்.

- வீதிகளில் விளையாட்டுக்களில் ஈடுபடக்கூடாது.
- வீதிகளில் உணவுகளை சாப்பிட்டுக்கொண்டு நடப்பதையும், கைத்தொலைபேசிகளில் உரையாடிக்கொண்டு நடப்பதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

வாகனத்தில் இருந்து இறங்கிய பின்னர் அந்த வாகனம் அவ்விடத்தினை விட்டு அகலும்வரை காத்திருந்துவிட்டு வீதியைக் கடக்க முயற்சியுங்கள்.




தொடர்ச்சி 6,7 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களைத் தடுக்கும்....

5ஆம் பக்கத் தொடர்ச்சி




## வீதியைக் கடக்கும்போது

✱ வீதியைக் கடக்கும்போது மஞ்சள் கடவைகளைப் பயன்படுத்துங்கள். மின் சமிக்ஞை விளக்குகள் இருக்குமாயின் அவற்றை பின்பற்றுங்கள்.

✱ பாதசாரிகளுக்கான கடவைப் பாலங்கள் இருக்குமாயின் அதனைப் பின்பற்றுங்கள்.

✱ சுரங்கப் பாதைகள் இருக்குமாயின் அவற்றைப் பயன்படுத்தி வீதிகளைக் கடக்கவும்.

✱ பொலிஸ் அதிகாரிகள் நிற்கும் இடங்கள் வீதியினைக் கடக்க பாதுகாப்பானவையாகும்.


## பாதசாரிகளுக்கு பாதுகாப்பான இடங்கள்


கவனயீனமாக வீதியைக் கடக்கும்போதுதான் பெரும்பாலான விபத்துக்கள் இடம்பெறுகின்றன. வீதியைக் கடப்பதற்குரிய இடங்களில் வீதியைக் கடப்பதன்மூலம் விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும். இதன்படி நீங்கள் வீதிகளைக் கடப்பதற்கு அதற்குரிய பொருத்தமான இடங்களையே தெரிவுசெய்துகொள்ளுங்கள். வீதிகளைக் கடக்கும்போது பின்வருவன தொடர்பாக அவதானம் செலுத்துங்கள்.

## பாதசாரிக் கடவை அதாவது 'மஞ்சள் கோடு' கடவையை பயன்படுத்துகையில்

வீதியை நோக்கித் திரும்பி நில்லுங்கள். கிட்டிய தூரத்தில் வேகமாக வரும் வாகனத்தினை செல்ல இடமளியுங்கள். வீதியைக் கடக்க முற்படும்போது கையை உயர்த்தி சாரதிக்கு சமிக்ஞை செய்யுங்கள். சமிக்ஞையை சாரதி பெற்றுக் கொண்டார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். வாகனம் நிறுத்தப்பட்ட பின்னர் கையை உயர்த்திக்கொண்டே வீதியினைக் கடந்து விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதன்பின்னர் சாரதிக்கு நன்றி செலுத்த மறவாதீர்கள்.

## மின்விளக்கு சமிக்ஞையில் கடக்கும் போது...

இவ்வாறான இடத்தில் வீதியைக் கடக்கும்போது வீதியை நோக்கி நில்லுங்கள். சிவப்பு மற்றும் பச்சை நிறமான மனித உருவினை சமிக்ஞையில் காண்பீர்கள். அதில் பச்சை மனித உரு தென்பட்டால் வீதியின் இரு மருங்கிலும் பார்த்துவிட்டு வீதியைக் கடந்துவிடுங்கள். அச்சந்தர்ப்பத்தில் வாகனங்களுக்கான திசையில் வாகனங்களை நிறுத்துவதற்கான சிவப்பு சமிக்ஞை ஒளிரும்.

பச்சை மனித உரு விட்டு விட்டு ஒளிருமாயின் வாகனங்கள் புறப்படத் தயாராகின்றன என்று அர்த்தமாகும். அதனால், வீதியைக் கடக்க ஆரம்பிக்காதீர்கள். அப்பொழுது நீங்கள் வீதியின் நடுவில் பயணிக்கின்றீர்களாயின் உங்கள் பயணத்தினை துரிதப்படுத்திக் கொள்ளுங்கள்.

பொலிஸ் அதிகாரி அல்லது பாடசாலை விதி பாதுகாப்பு உறுப்பினர் ஒருவர் அங்கு இருக்கின்றாராயின் இவ்வாறான இடத்தில் வீதியினைக் கடக்கும்போது, பொலிஸ் அதிகாரி சமிக்ஞை தரும்வரை காத்திருங்கள். வாகனம் நிறுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் வீதியினைக் கடக்க முயலுங்கள்.

## மேம்பாலம்/சுரங்கக் கடவை பாதை

பாதசாரிகளுக்கான பாதுகாப்பான இடங்கள் இதுவாகும். இவற்றைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் நன்மைகள் பலவாகும். பாதசாரிக் கடவைகளில் மற்றும் சமிக்ஞை விளக்குப் பகுதிகளில் விபத்துக்கள் நேர்வதற்கான வாய்ப்புகள் உள்ளபோதிலும் மேம்பாலம் மற்றும் சுரங்கக் கடவை பாதைகளில் விபத்துக்களுக்கான வாய்ப்பு ஏற்படுவதில்லை. வாகன நெரிசல் ஏற்படக்கூடிய தேவையும் தவிர்க்கப்படும்.

## பாதுகாப்பான இடம் இல்லாதபோது

வீதியினைக் கடப்பதற்கு பாதுகாப்பான இடம் இல்லாவிடின் என்ன செய்வது? சந்தி, வளைவு, மேட்டுப்பகுதி மற்றும் சரிவான இடம் அல்லாத இடமாகப் பார்த்து வீதிகள் தெளிவாகத் தெரியும் இடத்தினை தெரிவு செய்து காத்திருந்து கடவுங்கள். முதலில் வலது பக்கம் பாருங்கள். பின்பு இடது பக்கம் பாருங்கள். மூன்றாவதாக மீண்டும் வலது பக்கம் பாருங்கள். வாகனங்கள் இல்லாவிடின் துரிதமாக பாதையினைக் கடந்துவிடுங்கள்.

## பாதுகாப்பற்ற இடங்கள் ஆபத்தானது

வீதிகள் தெளிவாகத் தெரியாத இடங்கள்...

வளைவு கொண்ட இடங்கள்...

நிறுத்தப்படும் வாகனத்தின் முன்புறமாக...

அதிவேகப் பாதை...

ஆகிய பாதுகாப்பற்ற இடங்களிலிருந்து வீதிகளைக் கடக்க முயற்சிக்காதீர்கள்.

## பாதசாரியின் பொறுப்பு

* வாகனம் நிறுத்தப்பட்ட பின்னர் வாகனத்தில் ஏறுங்கள்.
* ஒருபோதும் மிதிபலகையில் பயணிக்காதீர்கள்.
* ஆசனப்பட்டிகளை அணிந்துகொள்ளுங்கள்.
* அமர்வதற்கு இருக்கை இல்லாவிடின் பாதுகாப்பான இடத்தினை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள்.
* வாகனத்திற்கு வெளியே தலையை, அல்லது கையை நீட்டாதீர்கள்.
* ஓடும் வாகனத்தின் வெளியே எதனையும் வீசி எறியாதீர்கள்.
* வாகனத்தினை நிறுத்தும் முன்பே இறங்க முயற்சிக்காதீர்கள்.
* வாகனத்தில் ஏறும்போதும் இறங்கும்போதும் பதற்றப்படாதீர்கள். பொறுமையாக செயற்படுங்கள்.




தொடர்ச்சி 8 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களைத் தடுக்கும்....

7ஆம் பக்கத் தொடர்ச்சி



## சைக்கிளில் பயணிக்கின்றீர்களாயின்

- ✱ எப்பொழுதும் இடது பக்கம் சைக்கிளை செலுத்துங்கள்.
- ✱ கால்களை கீழே வைக்கக்கூடியவாறு ஆசனத்தினை சரிசெய்துகொள்ளுங்கள்.
- ✱ முன்பகுதி மற்றும் பின்பகுதி பிரேக்குகள் சரிவர இயங்குகின்றனவா? என்று பாருங்கள்.
- ✱ சைக்கிளில் மணி ஒன்றினைப் பொருத்திக்கொள்ளுங்கள்.
- ✱ இரவில் பயணிக்கும்போது டோர்ச் லைட் இருக்க வேண்டும். பின்னால் பொருத்தப்பட்ட லைட்டும் இருக்க வேண்டும்.
- ✱ ஆபத்து விளைவிக்கும் வகையில் பொருட்களையோ, ஆட்களையோ ஏற்றிச் செல்வதனைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.




## பொதுவாகனங்களில் பயணிக்கும்போது

பஸ், புகையிரதம், பாடசாலை வேன் ஆகியவை நாம் போக்குவரத்திற்காக பயன்படுத்தும் பொதுப் போக்குவரத்து வாகனங்களாகும். இவற்றில் நீங்கள் எதில் பயணித்தாலும் அவதானமாக இருக்க வேண்டும்.

- ✱ தாமதமின்றி நேரகாலத்துடன் புறப்படுங்கள்.
- ✱ வாகனம் நிறுத்தப்படும்வரை காத்திருங்கள்.
- ✱ மிதி பலகையில் பயணிக்காதீர்கள்.

அமர்வதற்கு இருக்கை இருந்தால் அமர்ந்துகொள்ளுங்கள். ஆசனப்பட்டி இருந்தால் அணிந்துகொள்ளுங்கள்.

- ✱ நின்றுகொண்டு பயணிக்கையில் பாதுகாப்பான கம்பிகளை பிடித்துக்கொள்ளுங்கள்.
- ✱ முழுமையாக வாகனம் நிறுத்தப்பட்ட பின்னரே இறங்குங்கள்.
- ✱ நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தின் முன்புறமாக சென்று வீதியினைக் கடக்காதீர்கள்.
- ✱ நீங்கள் வந்த வாகனம் புறப்பட்டுச் செல்லும்வரை காத்திருந்துவிட்டு வீதியினைக் கடந்துவிடுங்கள்.

## மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது...



பொருத்தமான தலைக்கவசம் ஒன்றினை அணிந்துகொள்ளுங்கள். தலைக்கவசத்தின் நாடிப் பகுதி பட்டியினை சரிவரப் பொருத்திக்கொள்ளுங்கள்.

மோட்டார் சைக்கிளில் ஓட்டுநரும் மற்றுமொருவரும் மட்டுமே பயணிக்க வேண்டும்.

பின் ஆசனத்தில் அமருபவர் கால்களை விரித்து வைத்து அமர வேண்டும். ஓட்டுநருக்கு ஏற்ப தனது உடல்நிறையை சமப்படுத்திக்கொண்டு அமருதல் வேண்டும்.

மோட்டார் சைக்கிள் சிறந்த பராமரிப்புடன் இருத்தல் வேண்டும்.

## சாரதிகள்...

- ✱ குடிபோதையில்...
- ✱ அதிகமான களைப்பு, மந்த உறக்கநிலை...
- ✱ பதற்றம்...
- ✱ மனக்குழப்ப நிலையின்போது...

இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒருபோதும் வாகனத்தினை செலுத்தக்கூடாது...



## வாகனத்தினை செலுத்தும் போது

- ✱ வாகனம் சிறந்த தரத்தில் உள்ளதா? என்பதனை உறுதி செய்யுங்கள்.
- ✱ பொறுமையாக செயற்படுவது சாரதியின் கடமையாகும்.
- ✱ வாகனத்தினை எப்பொழுதும் இடது பக்கம் செலுத்த வேண்டும்.
- ✱ வாகனத்திற்குரிய ஒழுங்கில் செலுத்தப்பட வேண்டும்.
- ✱ எப்பொழுதும் ஆசனப்பட்டியினை அணிந்திருக்க வேண்டும்.
- ✱ வாகனத்தினை செலுத்தும்போது தொலைபேசியினைப் பயன்படுத்தல், உணவுகளை உட்கொள்ளுதல், புகைப்பிடித்தல் என்பன முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.
- ✱ எப்பொழுதும் வீதி ஒழுங்குகள், சமிக்ஞைகள், விதிகளுக்கு கட்டுப்பட்டு வாகனங்களை செலுத்த வேண்டும். அத்துடன், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், புகை பரீட்சிப்பு சான்றிதழ், என்பவற்றை வைத்திருக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானொலி ஒலிபரப்பு அமைப்பு முறைகள்


ஒலி நாடா

வானொலித் துறையானது, ஆரம்ப காலங்களில் அவ்வவ் நாடுகளின் அரசாங்கங்களின் ஒலிபரப்பு நிலையங்களாகவே இருந்தன. நாளடைவில் அவை தனியார் ஒலிபரப்பு நிலையங்களாகவும் பரிணமித்தன. பொதுவாக, வானொலி நிலையமொன்றின் நிர்வாக கட்டமைப்பானது, பரந்து பட்டதாக இருந்தாலும் ஒலிபரப்பாளர்களையும் தொழில்நுட்ப பிரிவாளர்களையும் ஒருங்கிணைத்ததாகவே அவை இருப்பதுண்டு. இதில் தலைமைப் பதவி வகிப்பவராக பணிப்பாளர் ஒருவர் இருப்பார்.

பணிப்பாளருக்கு அடுத்ததாக உதவி பணிப்பாளர்கள் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர்கள், தயாரிப்பாளர்கள் (நெறியாள்கை) தொகுப்பாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், ஒலிபரப்பு உதவியாளர்கள், அறிவிப்பாளர்கள் என வானொலி கட்டமைப்பு அமைகின்றது. மேற்கண்ட பணிகளுக்கு பொறுப்பான அனைவரதும் ஒன்றிணைந்த சேவையினூடாகவே வானொலி நிகழ்ச்சியானது, வெற்றிகரமாக நடக்கின்றது எனலாம். இதில் குறிப்பாக பணிப்பாளர், தயாரிப்பாளர், அறிவிப்பாளர் ஆகிய மூவரதும் ஒத்தாசைப் பிரிவுகளாகவே ஏனையவை இருக்கும்.

ஒரு பத்திரிகைக்கு பிரதானமானவராக பத்திரிகை ஆசிரியர் எப்படி இருப்பாரோ அதேபோல் தான் வானொலிக்கு பணிப்பாளர் இருப்பார். வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் நிர்வாகம் தொடர்புகளில் அதிகாரம் பொருந்தியவராக பணிப்பாளரே இருப்பார். வானொலியில் எத்தகைய நிகழ்ச்சிகளை வழங்கலாம், என்னென்ன மாற்றங்களை செய்யலாம் என்பது குறித்த இறுதித் தீர்மானத்தை பணிப்பாளரே எடுப்பார். வர்த்தக நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்வுகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், சமய நிகழ்ச்சிகள், வர்ணனை நிகழ்ச்சிகள், பல்சுவை நிகழ்ச்சிகள், நாடகங்கள், போட்டி நிகழ்ச்சிகள், செய்திகள், நேரடி ஒலிபரப்புக்கள், தேசிய மட்ட நிகழ்வுகள் என இன்னும் பல்வேறு நிகழ்ச்சிகளை கொண்டதாக வானொலி ஒலிபரப்பானது நடைபெறும்.


ஒலிப்பதிவு கூடம்





இறுவட்டு பாவனை

இவற்றில் சில நேரடி ஒலிபரப்புக்களாகவும் இன்னும் சில ஒலிப்பதிவு நிகழ்ச்சிகளாகவும் ஒலிபரப்பாவதுண்டு. எந்தவகையிலான நிகழ்ச்சியாயினும் அந்த நிகழ்ச்சிக்கென ஒரு தயாரிப்பாளர் இருப்பார். மேற்படி தயாரிப்பாளரே, நிகழ்ச்சிக்கான பிரதியை தயார் செய்வார். தயாரிப்பாளரது, நெறியாள்கைக்கேற்பவே அறிவிப்பாளரதும், ஒலிபரப்பு உதவியாளரதும் பணிகள் இடம்பெறும்.

இத்தகைய சீரான முன் ஆயத்தங்களுக்கு ஏற்பவே நிகழ்ச்சிகள் அமைக்கப்படுகின்றன. நிகழ்ச்சிக்கான பிரதியை தயாரிப்பாளர் எழுதுகின்றபோதிலும், அறிவிப்பாளர்கள் தேவைக்கு ஏற்ப நிகழ்ச்சியை மெருகேற்றுவதற்காக தமக்கே உரித்தான தனித்துவமான பணிகளை மேற்கொள்ளலாம். ஒலிப்பதிவு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் ஏதும் தவறுகள் நடந்துவிட்டால் அவற்றை மீண்டும் திருத்திக்கொண்டு மறு ஒலிப்பதிவு செய்து சீர்படுத்திவிட முடியும். ஆனால், நேரடி நிகழ்ச்சி என்பது அப்படியல்ல. இது மிகவும் நுணுக்கமாக, அவதானமாக கையாள வேண்டிய ஒன்றாகும்..நேரடி ஒலிபரப்பின்போது தப்பித்தவறி தவறுதலாக ஏதேனும் ஒலிபரப்பில் தடங்கலேற்பட்டால் அதனை சரிபடுத்திவிட முடியாது. இதனால், ஏற்படக்கூடிய சேதம் அழியாத தவறாகவே இருந்து விடும்.

ஆகவே, நேரடி ஒலிபரப்பானது, மிகவும் முன் ஆயத்தத்துடன் கையாள வேண்டிய ஒன்றாகவே அமைய வேண்டியது இன்றியமையாததாகும். ஒலிப்பதிவு முறையானது ஆரம்ப காலங்களில் தட்டுவடிவிலான ஒலிநாடாவிலேயே பதிவுசெய்யப்பட்டு ஒலிபரப்பப்பட்டன. நாளடைவில் நவீன கருவிகளின் வருகையின் பின்னர் இந்த ஒலிநாடாவானது, தற்போது இறுவட்டுக்களாக (Compact Disk-CD) பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தயாரிப்பாளர்களின் மேற்பார்வையில் அறிவிப்பாளர்கள் அறிவிப்பு செய்கையில் அதற்கு ஒத்ததான ஒலிப்பதிவு இறுவட்டுக்களை மறுமுனையில் இருந்தவாறு தொழிநுட்ப ஒலிபரப்பு உதவியாளர் ஒலிபரப்பு செய்வார். இவை அனைத்தும் வெளிச் சத்தங்கள் உள்நுழைய முடியாத ஒலிப்பதிவு கூடத்தினுள்ளேயே நடைபெறும்.

(தொடரும்)

-ரிஷபன்

வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் 8GB Pen Drive பரிசு!!



4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் பென்டிரைவ் உடன் இலவசமாக வழங்கப்படும்.

பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

*30.09.2015 'தூவானம்' கேள்விக்கான விடை:*
கண்
Pen Drive வெற்றியாளர்:
எம்.கீர்த்தனன்,
75/1, நியூ கொலனி,
தல்துவ, அவிசாவளை.

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(14.10.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை
Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)
Sponsored: MyLook.
FB/Web: MyLook.lk
Twitter: MyLookLK
(The Online Women Clothing Store)

இவ்வார கூப்பன்:
14.10.2015
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்


பெயர்: ..........................................................

01) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

★ *01 ஆம், 02 ஆம் வினாக்களில் வெற்றிடத்தில் வர வேண்டிய உருத் தொகுதியைத் தெரிவு செய்க.*


01.  ...................

1. 2. 3.

02.  ...................


1. 2. 3.

03. இங்குள்ளவற்றில் இரு உருவங்களை இணைப்பதன்மூலம் சதுரம் ஒன்றை ஆக்க முடியும். அவ்விரு உருவங்களையும் இனங்காண்க.



A B C D E

1. AC 2. AB 3. DE

04.  இவ்வுருவில் உள்ள செங்கோண முக்கோணங்கள் எத்தனை?

1. 4 2. 6 3. 2

05. $\frac{2}{3} + \frac{1}{4} = \frac{\square}{12}$ கட்டத்தினுள் வர வேண்டிய எண் யாது?

1. 4 2. 3 3. 11

06. பிற்பகல் நான்கிற்கு முப்பது நிமிடங்கள் என்னும் நேரத்தை நியம நேரக் கடிகாரத்தில் எவ்வாறு காட்டுவீர்?

1. 16:20 2. 03:30 3. 15:30

07. 6368 - ☐ = 4713 கட்டத்தினுள் வர வேண்டிய எண் யாது?

1. 2453 2. 1655 3. 4455

08. 3kg 750g இல் எத்தனை 250g அடங்கும்?

1. 16 2. 13 3. 15

09. $\frac{4}{12}$ இற்கு சமவலுப் பின்னம் யாது?

1. $\frac{4}{6}$ 2. $\frac{2}{4}$ 3. $\frac{1}{3}$




10. 5m நீளமும் 4cm அகலமும் கொண்ட ஒரு செவ்வகத்தின் பரப்பளவு யாது?

1. 20cm 2. 18cm 3. $20cm^2$

02) பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையை கீறிட்ட இடத்தில் எழுதுக.

01. ஒரு டசின் பலூனின் விலை ரூபா 66.00 ஆயின், ஒரு பலூனின் விலை யாது?

..........................................

02. அம்மா வாங்கி வந்த வளையல்களில் $\frac{3}{5}$ பங்கை அக்காவிற்குக் கொடுத்தார். எஞ்சிய பங்கை தங்கைக்குக் கொடுத்தார் எனின், தங்கைக்குக் கிடைத்த பங்கு யாது?

..........................................

03. அபியிடம் உள்ள பணம் ரூபா 450.00 ஆகும். இதில் $\frac{1}{2}$ பங்கை தங்கைக்கு கொடுத்தான் எனின், தங்கைக்குக் கொடுத்த பணம் யாது?

..........................................

04. மாணவி ஒருவருக்கு 4 இனிப்புகள் வீதம் 408 இனிப்புகளை எத்தனை மாணவிகளுக்கு பகிர்ந்து கொடுக்கலாம்?

..........................................

05. 1லீற்றர் தேங்காய் எண்ணெய்யின் விலை ரூபா 90.00 ஆகும். 2.5 லீற்றர் தேங்காய் எண்ணெய்யின் விலை யாது?

..........................................

06. ஒரு சதுரமுகியின் நீளம் 3cm ஆகும். அவ்வாறான இரண்டு சதுரமுகிகளை அருகருகே வைத்து அவதானித்தால் அதன் நீளம் யாது? அகலம் யாது?

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

### புலமைப்பரிசில் விடைகள் - தமிழ்

(ஒக்டோபர் 07 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

**01)** 1. மலைநாடு 2. குன்று/பர்வதம் 3. இறக்குமதி 4. தேயிலை 5. பச்சைக் கம்பளம் 6. காட்சி+அளிக்கும்

**02)** 1. புற்று 2. திறைசேரி 3. நிருபர் 4. நன்றி மறவாமை

**03)** 1. சிறுமி 2. ஆற்றிலே 3. நாளை 4. பட்டம் 5. நண்பர்களுக்கு

**04)** 1. நாம் பருவம் பார்த்து பயிர் செய்தல் வேண்டும்
2. பல்வேறு புத்தகங்களைப் படித்து பல விடயங்களை அறிந்துகொள்ளலாம்
3. நான் சீகிரியாவைப் பற்றி பள்ளிப் புத்தகங்களிலே படித்துள்ளேன்

**05)** 1. சென்றேன் 2. கொண்டாடினோம் 3. ஓடின

**06)** 1. பழப்பாகு 2. தளபாடம் 3. கரகாட்டம் 4. சிறப்பு 5. காவலன்

**07)** 1. உண்மை 2. பொறாமை 3. அபயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைப் பூங்குருவி

அறிவியல் பெயர்: *Myophonus blighi*

'இலங்கைப் பூங்குருவி' (Sri Lankan whistling thrush) என்ற பறவை இனம், இலங்கைக்கு மட்டும் உரித்தான-அழியும் அபாயத்தினை எதிர்கொண்டுள்ள பறவை இனமாக கருதப்படுகின்றது. கடல் மட்டத்திலிருந்து 300 மீற்றர் உயரத்தில் வசிக்கும் இப்பறவைகளை ஹக்கல மற்றும் ஹோர்ட்டன் பகுதிகளில் காணலாம். மிகவும் பயந்த சுபாவம் கொண்ட இந்த பறவைகள், புதர்களுக்குள்ளேயே வசிக்கும். சிலவேளைகளில் அங்கிருந்து வெளியேறி நீர்நிலைகள் சார்ந்த கற்பாறைகளில் அல்லது கிளைகளில் அமர்ந்து பூச்சிகள், பல்லிகள் என்பனவற்றை பிடித்து உட்கொள்ளும்.

மார்ச் முதல் மே வரையான காலப்பகுதியில் இப்பறவையினம் இனப்பெருக்கத்தில் ஈடுபடும். இவை உலர்ந்த மர இலைகள், வாடிப்போன தாவரங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி புதர்களில் கோப்பை வடிவிலான கூடுகளை அமைத்துக் கொள்ளும். இவற்றின் முட்டை வெண்ணிறமானது. அதில் செந்நிறம் மற்றும் மண்ணிறம் கலந்த அடையாளங்கள் இருக்கும்.





# அதிகரித்து வரும் யானைகளின் தொல்லை

இலங்கையில் காடுகளை அண்டிய பல கிராமப்புறங்களில் காட்டு யானைகளின் தொல்லைகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. திடீரென கிராமங்களுக்குள் நுழையும் இவை, வீடுகளைத் தாக்குவதுடன் சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் பாரிய சேதங்களை விளைவிக்கின்றன. அத்துடன், தோட்டப் பயிர்களையும் நாசப்படுத்தி வருகின்றன. பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளும் பயிர்ச்செய்கைகளை யானைகள் முற்றாக நாசப்படுத்தி வருவதானது, விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தும் செயற்பாடாக உள்ளது.

யானைகளின் இத்தகைய நடத்தைகளுக்கு பிரதான காரணமாக அமைவது யானைகளின் வசிப்பிடங்களான காடுகள் அழிக்கப்படுகின்றமை ஆகும். யானைகளின் நடமாட்டப் பகுதிகள் கட்டுப்படுத்தப்படுகின்றமை இதற்கு மற்றுமொரு காரணமாக கூறப்படுகின்றது.

# எரிபொருள் சிக்கனத்துடன் உணவுகளை சமைப்போம்

பண்டைய காலம் முதல் உணவு தயாரிப்பின்போது பயன்படுத்தப்படும் ஓர் எரிபொருளே விறகு ஆகும். இன்றும் உலகில் பெரும்பாலானவர்கள் விறகுகளைப் பயன்படுத்தியே உணவுகளை சமைக்கின்றனர். காரணம், மிகவும் செலவு குறைந்த எரிபொருளாக விறகுகள் உள்ளமையே ஆகும். எனினும், வனாந்தரங்கள் அருகி வருவதனால் விறகுகளைப் பெறுவது தற்போது பெரும் சிரமமான விடயமாக உள்ளது. நகரவாழ் மக்கள் விறகுக்குப் பதிலாக மின்சாரம் மற்றும் திரவப் பெற்றோலிய வாயுவை எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். நகர்ப் புறங்களில் விறகுகளைப் பெற்றுக் கொள்வது சிரமமான காரியமாக இருப்பதும், கேஸ் மற்றும் ஏனைய எரிபொருள் பாவனை இலகுவாக இருப்பதுமே இதற்குரிய காரணமாகும்.

எவ்வாறாயினும், மிகவும் வினைத்திறனான முறையில் விறகுகளைப் பயன்படுத்தி



உணவு சமைக்கக்கூடிய அடுப்புகள் தற்போதும் பாவனையில் உள்ளன. இரட்டைச் சூட்டடுப்பு மற்றும் உயிர்வாயு சோற்றடுப்பு என்பன இதற்கு சில உதாரணங்களாகும். எனவே, நீரைக் கொதிக்க வைக்கவும், உணவு தயாரிக்கவும் இயலுமான வரை விறகினைப் பயன்படுத்தினால் மின்சாரத்திற்கான செலவினையும் கேஸ் பயன்பாட்டின்போதான செலவினையும் குறைத்துக் கொள்ள முடியும்.







வாராந்தம் வினாவுக்கு விடையளித்து Lanka GlobalLifestyle வழங்கும் ரூ. 55,000 மதிப்புள்ள சோலார் பெனலொன்றை வென்றிடுங்கள்

**Lanka GlobalLifestyle**

**இவ்வார வினா:**

பண்டைய காலத்திலிருந்து உணவு தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் எரிபொருள் எது?



விடையை தபாலட்டையில் மாத்திரம் எழுதி, 23.10.2015 இற்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

மின்சாரத்தை சேமிப்போம் - சோலார் பெனல்களை வென்றிடுவோம் வினா - 10,
விஜய்,
த.பெ.இல. 2037, கொழும்பு.

| | | |
|---|---|---|
| சோலார் பெனல் வெல்பவர் | போட்டி இல - 8 இன் வெற்றியாளர் | எம்.ஜே.எஃப்.நைலூஃபா, 20A, 3 ஆம் ஒழுங்கை, ஸ்பில் றோட், புத்தளம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படலாம் எனக் கருதப்படும் முக்கோண வடிவ ஹைப்ரிட் இறக்கைகளைக் கொண்ட X48C விமானம் இதுவாகும். இதில் அதிகளவான பயணிகளையும் பொருட்களையும் காவிச் செல்ல முடியும் எனக் கருதப்படுகின்றது.

ஒலியின் வேகத்தினை மிஞ்சிக்கொண்டு ஆகாயத்தில் அதிவிரைவாகப் பறந்து சென்ற சுப்பர்சொனிக் ரக கொன்கோர்ட் விமானங்கள் பற்றி உங்களுக்கு நினைவிருக்கின்றதா? இன்றைக்கு சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கொன்கோர்ட் விமானப் பயணங்கள் யாவும் முற்றாக நிறுத்தப்பட்டன. தாழ்வாகப் பறக்கும்போது இந்த விமானங்கள் எழுப்பும் பேரிரைச்சல் மனிதர்களுக்கும் சூழலுக்கும் பாதிப்பினை ஏற்படுத்துவதனைக் காரணம் காட்டியே, இந்த கொன்கோர்ட் ரக விமானப் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டது. இந்த தடையுடன் சுப்பர்சொனிக் விமானப் பயணங்கள் குறித்தான கனவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டன. எனினும், சுமார் ஒரு தசாப்த காலத்திற்குப் பின்னர், தற்போதளவில் சுப்பர்சொனிக் விமானப் பயணங்கள் குறித்த கனவுகள் மீண்டும் நனவாகவுள்ளன. நாஸா நிறுவனமே சுப்பர்சொனிக் விமானங்கள் குறித்த கனவினை நனவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.






# அதிவேக வான் பயணத்தில் மீண்டும் இணையவுள்ள சுப்பர்சொனிக் விமானங்கள்

## 2.3 மில்லியன் செயற்றிட்டம்

இந்த செயற்றிட்டத்திற்கு 2.3 மில்லியன் டொலர்களை செலவிடப்போவதாக நாஸா நிறுவனம் அறிவித்துள்ளது. பாதுகாப்பான விமானப் பயண சேவைக்காகவே இந்த பணம் செலவிடப்படவுள்ளது. இதற்கென எட்டு ஆய்வு செயற்றிட்டங்கள் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ளன. சுப்பர்சொனிக் விமானம் ஒன்று பறக்கும்போது வளிமண்டலத்திற்கு ஏற்படும் பாதிப்பினைக் குறைப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்ளவும், பறக்கும்போது எழும் சத்தத்தைக் குறைக்கவும் இந்த செயற்றிட்டங்களின்மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.



நாஸா நிறுவனத்தின் உதவியுடன் போயிங் நிறுவனம் உருவாக்கிய 'Icon II' என்ற எதிர்கால சுப்பர்சொனிக் ஜெட் விமானமே இது. எரிபொருள் சிக்கன வசதிகளுடன் இது உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாரிய அதிர்வொலி வெளிப்பாடு தொடர்பான விதிமுறைகள் குறித்தும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.



நாஸா நிறுவனம் சுப்பர்சொனிக் விமானம் தொடர்பான கனவினை நனவாக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. நாஸா நிறுவனத்தின் புதிய சுப்பர்சொனிக் விமானத்தின் மாதிரி வடிவமே இது.




1995 - 96 காலப்பகுதியில் 'சுப்பர் சொனிக் லெமினா ஃப்ளோ கண்ட்ரோல் ப்ரொஜெக்ட்டிற்காக பயன்படுத்தப்பட்ட NASA F-16XL ஜெட் விமானமே இதுவாகும்.

## பாரிய ஒலி அலைகளைக் குறைத்தல்

சுப்பர்சொனிக் விமானங்களை பயணிகள் விமானசேவையில் ஈடுபடுத்துவதற்கு உள்ள பெரும் தடை என்னவெனில், அவை ஒலியிலும் வேகமாக பறக்கும்போது எழுப்பும் உயர் அதிர்வொலி (sonic boom) ஆகும். இந்த பேரிரைச்சலானது, மனிதனால் தாங்கிக்கொள்ள முடியாத பாரிய வெடிப்புச் சத்தம் போன்று இருக்கும். இதன் காரணமாகத்தான் அவற்றின் சேவையும் நிறுத்தப்பட்டது. இதனை அடுத்தே, பாரிய அதிர்வொலியினை ஏற்படுத்தாத விதத்தில் சுப்பர்சொனிக் விமானங்களை ஈடுபடுத்தும் வகையிலான திட்டங்களுக்கு அதிக நிதி செலவிடப்படவுள்ளது.

## சிவில் விமானப் பயணங்கள்

இதற்கமைய, எதிர்கால சுப்பர்சொனிக் சிவில் விமானப் பயணங்களின்போது, பாரிய ஒலி அலைகள் எழாதவகையிலான தொழில்நுட்பத்துடன் கூடிய செயற்றிட்டத்தினை முன்னெடுப்பதற்கு நாஸா நிறுவனம் முன்வந்துள்ளது. அத்துடன், பாரிய சத்தத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும் வேறு உபாயங்கள் குறித்தும் நாஸா நிறுவனம் தகவல்களை திரட்டி வருகின்றது.



## மீண்டும் சேவையில் ஈடுபடுத்தலாம்

ஒலியின் வேகத்தினை மீறி செல்லும்போது ஏற்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாஸா நிறுவனத்தின் க்லென் ஆய்வு நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள சுப்பர்சொனிக் ஒலி மட்டத்தினை பரிசோதனை செய்வதற்கான விசேட காற்று சுரங்கமும், அதில் பரீட்சார்த்த சோதனைகள் நடத்தப்பட்ட எதிர்கால சுப்பர்சொனிக் விமானத்தின் மாதிரி வடிவமொன்றும்.




North American XB 70 Valkyrie என்ற சுப்பர்சொனிக் விமானத்தின் மூல மாதிரி வடிவமே இது. இந்த விமானம் இன்னும் உருவாக்கப்படவில்லை என்றாலும், நாஸா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் இந்த புதிய முதலீட்டினால், சுப்பர்சொனிக் தொழில்நுட்பத்தினை மீண்டும் உயிர்ப்பிப்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும்.



ஒலியின் வேகத்தினை மிஞ்சும் வகையில் பறக்கும் கொன்கோர்ட் (Concorde) விமானம் இதுவாகும். 1976 முதல் 2003 வரை விமான சேவையில் ஈடுபடுத்தப்பட்ட கொன்கோர்ட் விமானங்கள், பயணத்தின்போது, வெளியிடும் பேரிரைச்சல் காரணமாக விமான சேவைகளிலிருந்து நிறுத்தப்பட்டன.

## தடைகளை வெற்றிகொள்ளல்


சுப்பர்சொனிக் விமானங்களினால் ஏற்படக்கூடிய இதர பாதிப்புகளாக, ஆகாயத்தில் வெளிவிடப்படும் தீங்கான வாயு,எரிபொருள் வினைத்திறன், விமான நிலையங்களுக்கு அண்மையில் வெளியிடப்படும் மனிதனுக்குப் பாதிப்புத் தரும் பேரிரைச்சல் என்பன குறிப்பிடப்படுகின்றன. எனவே, இந்த பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகின்றது.ஆனால், அதற்காக பல வேலைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்று நாஸா விஞ்ஞானி ரூபன் டேல் ரொசாரியோ குறிப்பிடுகின்றார். சுப்பர்சொனிக் பயணங்களினால் வான் பரப்பில் பாதிப்பு ஏற்படுகின்றதா? என்பது குறித்து மற்றுமோர் ஆய்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## ஓசோன் பாதிப்பினைக் குறைத்துக்கொள்ளல்

சுப்பர்சொனிக் விமானத்தினால் வெளியிடப்படும் வாயுவினால் ஓசோன் படலத்திற்கு ஏற்படும் பாதிப்பினைக்



1995 - 96 காலப்பகுதியில் 'சுப்பர் சொனிக் லெமினா ஃப்ளோ கண்ட்ரோல் ப்ரொஜெக்ட்டிற்காக பயன்படுத்தப்பட்ட NASA F-16XL ஜெட் விமானமே இதுவாகும்.



சிவில் விமானப் போக்குவரத்துகளின்போது சுப்பர்சொனிக் வேகமாக பயணிக்க வேண்டுமாயின் அதிலிருந்து ஏற்படும் பாரிய இரைச்சலைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கமைய, விமானத்தின் வடிவம் உட்பட, அதற்கான பல மாற்று வழிமுறைகள் குறித்து நாஸா நிறுவனம் பரிசீலித்து வருகின்றது.



அதிர்வொலி காரணமாக, ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர், மீண்டும் இந்த விமான சேவையினை ஆரம்பிக்க முடியும் என்று பீற்றர் கோன் கூறுகின்றார். வொஷிங்டனில் அமைந்துள்ள நாஸா நிறுவனத்தின் விண்வெளி ஆய்வு செயற்றிட்ட அதிகாரசபையின் அதிவேக விமானப் பயணங்கள் செயற்றிட்டத்தின் தலைமை அதிகாரியாக பீற்றர் கோன் பதவி வகிக்கின்றார்.

கருத்திற்கொண்டே, 1971 இல் அமெரிக்க அரசாங்கம் சுப்பர்சொனிக் விமானத்திற்கான செலவினத்தைக் குறைத்துக்கொண்டது.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள அதிநவீன என்ஜின் மூலம் ஓசோனை பாதிக்கும் வாயு வெளியேற்ற மட்டத்தினை கணிசமானளவுக்கு குறைக்க முடியும் என்றே கூறப்படுகின்றது.

-பிரியா



# அடர்த்தியான ரோமங்களைக் கொண்ட செம்மறி ஆடு கண்டுபிடிப்பு...!

உலகிலேயே மிகவும் அடர்ந்த ரோமங்களைக் கொண்ட செம்மறி ஆடொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த செம்மறி ஆட்டின் கண்களை மூடி மறைக்கும் வகையிலும் அது நடப்பதற்கே சிரமப்படும் வகையிலும் அதன் உடலில் ரோமங்கள் மிகவும் அடர்த்தியாக வளர்ந்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அவுஸ்திரேலியாவின் வெஸ்டன் க்ரீக் புறநகர்ப் பகுதியில் மலை ஏறும் ஒருவரே, இந்த செம்மறி ஆட்டினை முதலில் கண்டுள்ளார். உடனே, இது குறித்து விலங்குகள் துன்புறுத்தலுக்கு எதிரான அமைப்புக்கு அவர் அறிவித்துள்ளார். மெரினோ இனத்திற்குரிய இந்த செம்மறி ஆட்டுக்கு அவர் 'க்றிஸ்' என்று பெயரிட்டுள்ளார்.

இந்த செம்மறி ஆட்டினைக் கண்டுபிடிக்கும்போது, அதன் அடர்ந்த ரோமங்களுக்குள் சிறுநீர் மற்றும் கழிவுகள் இருந்தமையினால், அது நோய்த் தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. பின்னர் ரோமங்களை வெட்டும் நபர் ஒருவர் அங்கு அழைத்துவரப்பட்டு அதன் ரோமங்கள் அகற்றப்பட்டுள்ளன. இதன் ரோமங்களை அகற்றுவதற்கு சுமார் 45 நிமிடங்கள் எடுத்துள்ளன. அத்துடன், க்றிஸ்ஸின் உடலில் காயங்கள் ஏற்படாத வகையில் ரோமங்களை அகற்ற வேண்டிய கட்டாயத்திற்கும் அவர் ஆளானார்.





பொதுவாக, செம்மறி ஆடொன்றின் ரோமங்களை மழிப்பதற்கு 2 நிமிடங்கள் போதுமானது. அத்துடன், அதன்போது 4 முதல் 5 கிலோ வரையான ரோமங்களே கிடைக்கும். எனினும், க்றிஸ்ஸின் உடலில் இருந்து 40 கிலோவைவிட அதிகமான ரோமங்கள் அகற்றப்பட்டதாக கூறப்படுகின்றது. அத்துடன், இது புதிய சாதனையாகவும் பதிவாகியுள்ளது.

மெரினோ இன ஆடுகளின் ரோமங்கள் 12 மாதங்களுக்கு ஒரு தடவை மழிக்கப்படுகின்றன. இல்லாவிடின் பல நுண்ணங்கிகளின் தாக்கத்திற்கு அவை உட்படக்கூடும். அத்துடன், வெப்பகாலத்தில் இவ்வாறான அடர்த்தியான ரோமங்கள் உஷ்ணம் காரணமாக தானாகவே தீப்பற்றி அவற்றின் உடலில் பாதிப்புகளை ஏற்படுத்தியும் விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'வைரம்' என்பது ஒரு கனிமமாகும். உலகில் மிகவும் பெறுமதியான கனிமமாக இது கருதப்படுகின்றது. வைரம் பதிக்கப்பட்ட ஆபரணங்கள் செல்வந்தர்களின் அடையாள மாகவே கருதப்படுகின்றன. வைரங்களை அணிவதன் மூலம் எதிரிகளை விரட்ட முடியும் என்று இன்றும்கூட சிலரிடையே கருத்து நிலவுகின்றது. இயற்கையின் அரிய கொடையான வைரக்கற்களை செயற்கையாக உருவாக்கவும் மனிதன் முயன்றிருக்கின்றான்.



# வைரம் பற்றிய தகவல்கள்





## வைரக் குடும்பம்

வைரங்கள் நம் மத்தியில் பிரபல்யம் ஆகாவிட்டாலும், அதன் குடும்பத்திலிருந்து நாம் பல நன்மைகளைப் பெறுகின்றோம். நிலக்கரி அதில் முதலிடம் வகிக்கின்றது. அத்துடன், காரீயமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. நாம் எழுதப் பயன்படும் பென்சில் கூர் காரீயத்தில் உருவாக்கப்பட்டதாகும். இவை சுத்தமான காபன் பதார்த்தங்களாகும். இவற்றில் உள்ள காபன் மூலக்கூறுகளின் சதவீத வேறுபாட்டின் அடிப்படையிலேயே இவை வேறுபடுகின்றன.

## வைரம் எப்படி உருவாகின்றது?

அதிக அழுத்தம் மற்றும் வெப்பமே வைரத்தினை உருவாக்குகின்றன. இவை சுத்தமான காபன் வகையாகும். அந்தவகையில், நிலத்தின் ஆழ்பகுதியிலேயே வைரம் உருவாகின்றது. இற்றைக்கு பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வெளியான எரிமலைக் குழம்புகள் மூலம் வைரம் உருவாகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

ஆங்கிலத்தில் இதனை 'Diamond' என்று அழைக்கின்றனர். கிரேக்கத்தின் 'adamas' என்ற சொல்லில் இருந்தே Diamond என்ற சொல் பிறந்துள்ளது. இதன் பொருள் 'உடைக்க முடியாதது' என்பதாகும். மிகவும் மெல்லிய வைர முனைகொண்ட வெட்டும் கருவியால் உறுதியான ஒரு பாறையைக்கூட வெட்டி அகற்றலாம். அந்தளவுக்கு வைரம் வலிமை மிக்கது.

## வைரம் எங்குள்ளது?

வைரம் தொடர்பான வரலாறு மிகவும் தொன்மையானது. இந்திய சமஸ்கிருத ஆவணங்களில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் வைரத்தின் சொர்க்காபுரியாக இந்தியா திகழ்ந்துள்ளது. பண்டைய கால ரோமாபுரிக்கும் இந்தியாவினூடாகவே வைரம் பற்றிய தகவல்கள் பரவியுள்ளன. இந்தியாவில் வைரங்களுக்கான கேள்வி குறையும் போது, ஏனைய நாடுகளும் வைரங்களை தேடத் தொடங்கின. இதனையடுத்து, உலகின் பல்வேறு பாகங்களிலும் வைரங்கள் கிடைக்க ஆரம்பித்தன.





வைரம் கிடைக்கும் இடங்கள்

## வைரங்களின் நிறம்

வைரங்களின் நிறத்திற்கு ஏற்ப அவை பல வகைப்படும். முழுமையாக ஊடுருவிப் பார்க்கக்கூடிய வைரங்கள், அரைவாசியாக ஊடுருவித் தென்படக்கூடியவை, ஊடுருவிப் பார்க்க முடியாதவை என்று அவை வகைப்படுத்தப்படுகின்றன. கறுப்பு, நீலம், இளம் மஞ்சள், சாம்பல், மண் நிறம், வெளிர் பச்சை, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள், ஊதா போன்ற நிறங்களிலும் நிறமற்ற நிலையிலும் வைரங்கள் உள்ளன. நீல நிற வைரமும் நிறம் அற்ற வைரமும் பெறுமதி கூடியவையாகும்.

## வைரத்தை பட்டை தீட்டல்

இரத்தினக்கற்களை பட்டை தீட்டும்போதே அதன் பெறுமதி அதிகரிக்கின்றது. அதுபோன்றுதான் வைரமும். வைரம் பட்டை தீட்டப்படும்போதே, பெறுமதிமிக்கதாகின்றது. அதனை வெட்டிப் பட்டை தீட்டுவது மிகவும் நுணுக்கமாக செய்யவேண்டிய ஓர் அற்புதக் கலையாகும். வைரத்தின்மீது விழும் ஒளி தெறிப்படைந்து அதன் நிறத்தினை மாற்றுகின்றது. இதன்படி, அதிக ஒளி உறிஞ்சிக்கொள்ளும் வகையில் வைரங்கள் பட்டை தீட்டப்படுகின்றன. கணித முறைக்கு ஏற்பவும் தரத்தின் அடிப்படையிலும் வைரங்கள் பட்டை தீட்டப்படுகின்றன. நன்கு பட்டை தீட்டப்பட்டவுடன் வைரங்கள் பிரகாசிப்பதனைத் தெளிவாகக் காண முடியும்.

## வைரத்தின் அளவை

தங்கத்தின் நிறுத்தல் அளவை 'கெரட்' ஆகும். அவ்வாறே, வைரங்கள் மற்றும் முத்துக்களின் நிறுத்தல் அளவையும் 'கெரட்' ஆகும்.


- அஷ்விதா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உயிரினங்கள் உயிர்வாழ இன்றியமையாதவற்றுள் ஒன்றாக 'உணவு' இருக்கின்றது. ஆரோக்கியமாக வாழ ஆரோக்கியமான உணவு தேவையாகும். ஆனால், இன்று உலகிலுள்ள 80 இற்கும் மேற்பட்ட வறுமையான நாடுகளைச் சேர்ந்த சுமார் 90 மில்லியன் மக்கள் ஒருவேளை உணவுக்கே வழியில்லாத நிலையில் உள்ளனர். அதற்கமைய, உலகை அச்சுறுத்தும் பாரிய பிரச்சினையாக உணவுப் பற்றாக்குறை காணப்படுகின்றது.*






## உணவு மற்றும் விவசாய அமைப்பு

உலக உணவுப் பிரச்சினையை தீர்க்கும் முயற்சியில் பெரும் பங்காற்றி வரும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு 1945 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதனை நினைவுகூருமுகமாகவே ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி 'உலக உணவு தினம்' அனுஷ்டிக்கப்படுகின்றது. எனினும், 1979 ஆம் ஆண்டு முதலே இந்த தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஹங்கேரி நாட்டின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் போல் ரொமானியோ அவர்களின் முயற்சியே இத்தினம் அனுஷ்டிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தது. இவ்வருடத்திற்கான உலக உணவு தின தொனிப்பொருளாக 'சமூகப் பாதுகாப்பு மற்றும் விவசாயம்: கிராமிய வறுமை சக்கரத்தை ஒழிக்கும்' என்பதாகும்.



## உலக உணவுத் திட்டம்

1962 இல் ஈரானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி, அதனைத் தொடர்ந்து தாய்லாந்தில் ஏற்பட்ட புயல் என்பனவற்றால் லட்சக்கணக்கானோர் அகதிகளாயினர். இந்த நெருக்கடியை கருத்தில் கொண்டு, 1963 இல் உலக உணவுத் திட்டம் பரீட்சார்த்தமாக தோற்றுவிக்கப்பட்டது. இன்றளவில் உலகில் இயற்கை அனர்த்தங்களாலும் யுத்தங்களாலும் அகதிகளாகும் மக்களுக்கு, உலக உணவுத் திட்டம் பேருதவி புரிந்து வருகின்றது.

இலங்கையில் 1968 இல் கொழும்பு நகரில் உலக உணவுத் திட்டத்தின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாட்டின் யுத்தப் பாதிப்புக்குள்ளான பிரதேசங்கள் தோறும் இதன் கிளை அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டு, அவற்றினூடாக நிவாரண உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது. தாய்-சேய் போஷாக்கு, கல்விக்கான உணவு, வேலைக்கான உணவு, பயிற்சிக்கான உணவு போன்ற பல்வேறு நோக்கங்களை இலக்காகக்கொண்டு இத்திட்டத்தின்மூலம் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## உணவுத் தட்டுப்பாட்டுக்கான பிரதான காரணிகள்

இன்று உலக அமைதியை பாரதூரமாக அச்சுறுத்தும் உணவுப் பிரச்சினைக்கு பிரதானமான காரணிகளை ஐந்தாக வகைப்படுத்தியுள்ளனர்.

- சனத்தொகை அதிகரிப்பு.
- உயிரியல் எரிபொருள் உற்பத்தி.
- அதிகரித்து வரும் மத்தியதர வர்க்கம்.
- எதிர்பாராத காலநிலை மாற்றங்கள்.
- நாடுகளின் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலை.


இவ்வாறான காரணிகளால் சர்வதேச ரீதியில் உணவு நெருக்கடி நிலவி வருகின்றது. எனவே, பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவையை நிறைவு செய்வதை நோக்காகக் கொண்டு உலகில் பல்வேறு அமைப்புகள் இயங்கி வருகின்றன. உலக உணவு தினமானது, இவ்வமைப்புகளின் பணியை வினைத்திறனாக மாற்றுவதற்கான ஒரு முக்கிய தினமாக இருப்பதோடு, உணவு தொடர்பில் உலக மக்களை விழிப்புணர்வு பெறச் செய்யும் தினமாகவும் அமைகின்றது.


எனவே, உலகில் வாழும் ஒவ்வொருவரும் உணவை வீண் விரயமாக்காமல், உணவின்றிப் பட்டினியால் வாடும் மக்களின் உணவுத் தேவையை பூர்த்திசெய்யவும் பட்டினி வாழ்வை ஒழிக்கவும் இயன்றளவு முயற்சிக்க வேண்டும்.

-அ



## இவ்வார கார்ட்டூன் படம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆயுபோவன்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் மாமிக்கும் மகனுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

නැන්දා: ආ.. පුතා! එන්න.. එන්න.
ஆ... புதா! என்ன... என்ன.
மாமி: ஆ... மகன்! வாங்க... வாங்க.

පුතා: කොහොමද නැන්දේ? කෝ මාමා?
கொஹொமத நெந்தே? கோ மாமா?
மகன்: எப்படி மாமி? மாமா எங்கே?

නැන්දා: මාමා කඩයට ගියා. පුතාට A/L විභාගය ඉවරයි නේද?
மாமா கடயட்ட கியா. புதாட்ட A/L விபாகய இவரய் நேத?
மாமி: மாமா கடைக்குப் போனார். மகனுக்கு A/L பரீட்சை முடிந்துவிட்டது அல்லவா?

පුතා: ඔව් නැන්දේ. දැන් නම් හරිම සැනසීමයි වගේ.
ஒவ் நெந்தே. தென் நம் ஹரிம செனசீமய் வகே.
மகன்: ஆம் மாமி. இப்போதென்றால் நல்ல நிம்மதி.

නැන්දා: කොහොමද විභාගය? ලේසිද පුතා?
கொஹொமத விபாகய? லேசித புதா?
மாமி: பரீட்சை எப்படி? இலகுவாக இருந்ததா மகன்?

පුතා: ලේසිත් නැහැ. අමාරුත් නැහැ.
லேசித் நெஹெ. அமாருத் நெஹெ.
மகன்: இலகுவாகவும் இல்லை. கஷ்டமும் இல்லை.

නැන්දා: එහෙනම් පුතා පාස්වෙයි.
எஹெனம் புதா பாஸ்வெய்.
மாமி: அப்படியென்றால் மகன் சித்தி பெறுவீங்கள்.

පුතා: කියන්න බැහැ නැන්දේ. මල්ලි පාසල් ගියාද නැන්දේ?
கியன்ன பெஹெ நெந்தே. மல்லி பாசல் கியாத நெந்தே?
மகன்: சொல்ல முடியாது மாமி. தம்பி பாடசாலைக்குச் சென்றானா மாமி?

නැන්දා: ඔව් පුතේ. එන්න පුතා, අපි තේ ටිකක් බොමු.
ஒவ் புதே. என்ன புதா, அப்பி தே டிக்கக் பொமு.
மாமி: ஆம் மகன். வாங்க மகன், நாம் தேநீர் குடிப்போம்.

පුතා: හොඳයි නැන්දේ.
ஹொந்தய் நெந்தே.
மகன்: நல்லது மாமி.



**பயிற்சி**

சிங்களத்தில் மொழிபெயர்க்க.

i. மாமா கடைக்குப் போனார்.
..............................................
ii. பரீட்சை எப்படி மகன்?
..............................................
iii. தேநீர் குடிப்போம்.
..............................................




## கலப்பு வாக்கியம்
## Complex Sentence

Because எனும் இணைக்கும் சொல்லைக் (Joining Word) கையாண்டு ஒன்றிணைக்கப்பட்டுள்ள கலப்பு வாக்கியங்களை இங்கே அவதானிப்போம். காரணங்களைத் (Reasons) தெரிவிக்கும் கலப்பு வாக்கியங்கள் என இவற்றை வகைப்படுத்தலாம்.

அ) I could not start the work on time.
என்னால் அந்த வேலையை உரிய நேரத்தில் ஆரம்பிக்க முடியவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஆ) I was late.
நான் தாமதம் ஆகினேன்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

* I could not start the work on time because I was late.
நான் தாமதம் ஆகியதால், என்னால் அந்த வேலையை உரிய நேரத்தில் ஆரம்பிக்க முடியவில்லை.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

இ) Sumathi could not go to that function.
சுமதியால் அந்த வைபவத்துக்குப் போக முடியவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஈ) She was sick.
அவள் சுகவீனமாக இருந்தாள்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

* Sumathi could not go to that function because she was sick.
சுமதி சுகவீனமாக இருந்ததால், அவளால் அந்த வைபவத்திற்குப் போக முடியவில்லை.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

உ) Rohan did not eat much rice.
ரொஹான் அதிக சோறு உண்ணவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஊ) He was not hungry.
அவனுக்குப் பசி ஏற்படவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

* Rohan did not eat much rice because he was not hungry.
ரொஹானுக்கு பசி ஏற்படாததால், அவன் அதிக சோறு உண்ணவில்லை.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

எ) Nazeer passed the examination.
நஸீர் பரீட்சையில் சித்தியடைந்தான்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஏ) He studied very hard.
அவன் மிகவும் கடுமையாகப் படித்தான்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

* Nazeer passed the examination because he studied very hard.
நஸீர் மிகவும் கடுமையாகப் படித்ததால், பரீட்சையில் சித்தியடைந்தான்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் விளையாட்டில் ஈடுபாடு குறைவாம்

இன்றைய பாடசாலை மாணவர்களில் மிகவும் குறைவான பத்து வீதமானோரே விளையாட்டுக்களில் கலந்துகொள்வதாக கல்வித்துறை அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். ஆகையினால் கல்வியுடன், விளையாட்டுத்துறையையும் மேம்படுத்துவதற்காக கடந்த காலங்களைவிட கூடிய நிதி ஒதுக்கீடுகளை இவற்றிற்கு வழங்கத் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிபிட்டுள்ளார்.

மேலும், இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்; பாடசாலைகளுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்குதல், சர்வதேச மட்டத்திலான



## கல்வித்துறை அமைச்சர் கவலை

போட்டியாளர்கள் உரிய பயிற்சிகளை பெறக்கூடிய வசதிகளை வழங்குதல் போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் குறிப்பிட்டதுடன், விளையாட்டுத்துறையில் இன்றைய மாணவர்கள் காட்டும் ஈடுபாடு தொடர்பில் கவலைக்குரிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் விளையாட்டின் அத்தியாவசியத் தன்மை குறித்து மாணவர்களுக்கு தெளிவூட்டல் வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## கெயில் வரவில்லை;

# நரைன் வருகிறார்





ஒக்டோபர் 14 ஆம் திகதி ஆரம்பமாகின்ற இலங்கை மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் மேற்கிந்திய வீரர் கிறிஸ் கெயில் இடம்பெற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக்கு உட்பட்டு ஓய்வில் இருப்பதன் காரணமாகவே, அவர் இந்த போட்டித் தொடரை இழந்துள்ளதாக கருதப்படுகின்றது.

**மீண்டும் நரைன்:**

இதேவேளை, ஒருவருட கால போட்டித் தடையின் பின்னர் மேற்கிந்திய தீவுகளின் சுனில் நரைன் கலந்துகொள்ளும் முதலாவது போட்டியாக இலங்கையுடனான போட்டி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பந்தை விதிமுறைக்கு மாறாக வீசி எறிகிறார் என்ற குற்றச்சாட்டிலேயே அவருக்கு மேற்படி தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூன்றாவது அணியாக களமிறங்கிய இந்திய கிரிக்கெட் ரசிகர்கள்



தென்னாபிரிக்கா-இந்தியா அணிகளுக்கிடையே இந்தியாவின் கட்டாக் நகரில் நடைபெற்ற இரண்டாவது 'டுவென்டி டுவென்டி' போட்டியில் இந்திய ரசிகர்கள் மூன்றாவது அணியாக களமிறங்கி இந்தியாவின் கௌரவத்திற்கு இழுக்கை ஏற்படுத்திவிட்டனர்.

மேற்படி போட்டியில் தென்னாபிரிக்க அணி இலகு வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தமையால், அதனை சகிக்க முடியாத நிலையில் இந்திய ரசிகர்கள் கல், தண்ணீர் போத்தல் போன்றவற்றை மைதானத்தை நோக்கி வீசி எறிந்து போட்டியை தடுக்க முற்பட்டனர்.

இப்போட்டியில் இந்திய ரசிகர்கள் நடந்துகொண்ட விதத்தையிட்டு பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். கிரிக்கெட் போட்டியை ரசிக்கும் பண்பினை இத்தகைய ரசிகர்களுக்கு புகட்ட வேண்டிய அவசியம் இருப்பதையே இச்சம்பவம் உணர்த்துகின்றது. எந்தவொரு போட்டியிலும் ரசிகர்கள் மூன்றாவது அணியாக போட்டியிட முனைவார்களேயானால், அது இழுக்கான ஒரு நிலையாகவே கருதப்படும்.




# டென்னிஸ் தரப்பட்டியலில் ஜெக்கோவிச், செரினா முதலிடம்



சர்வதேச டென்னிஸ் தரப்படுத்தல் பட்டியலுக்கமைய 15,645 புள்ளிகளைப் பெற்று சேர்பீரியாவின் நொவெக் ஜெக்கோவிச் தொடர்ந்து முதலாவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் ரொஜர் ஃபெடரர் இதில் 9,420 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

ஜெக்கோவிச் தொடர்ச்சியாக 167 வாரங்களாக இவ்வாறு முதன்மை இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளமை சிறப்பம்சமாக கருதப்படுகின்றது. இந்த தரப்படுத்தல் பட்டியலின் படி, முன்னைய நாட்களில் முதல் இடத்தை வகித்துவந்த ஸ்பெயின் நாட்டின் ரஃபாயல் நட்டால் இம்முறை 3,770 புள்ளிகளுடன் 08 ஆவது இடத்தையே பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மகளிர் டென்னிஸ் பிரிவின் தரப்படுத்தல் பட்டியலின்படி மீண்டும் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 11,285 புள்ளிகளுடன் முதலாவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார். இதில் இரண்டாவது இடத்தை ருமேனியா நாட்டின் சிமோனா ஹெலெப் (6,670 புள்ளிகள்) பெற்றுள்ளார். அவ்வாறே, இதற்கு முன்னர் முதலாம் இட வீராங்கனையாகத் திகழ்ந்து வந்த அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 14 ஆவது இடத்தையே பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலிபாபாவும் 40 திருடர்களும்

22

கதை, ஓவியம்: வேணு வாரியத்




# தெரிந்து கொள்வோம்

* ஐஞ்சிறு காப்பியங்கள் எவை?

சூளாமணி, உதயணன் கதை, நீலகேசி, நாககுமார காவியம், யசோதர காவியம்

* தேச வழமைச் சட்டம் எப்போது முதல் அமுலாக்கப்படுகின்றது? இச்சட்டம் யாருக்காக, எதற்காக கொண்டுவரப்பட்டது?

ஒல்லாந்தர் ஆட்சியிலிருந்து தமிழ் மக்களுக்கான சொத்து சம்பந்தமான சட்டமாக கொண்டுவரப்பட்டது



* உலகில் புழக்கத்தில் உள்ள நாணயங்களை (பணத்தை) வன் நாணயங்கள், மென் நாணயங்கள் என அழைக்கின்றனர். இதில் வன் நாணயங்கள் எவை?

அமெரிக்க டொலர், ஸ்ரேலின் பவுண், பிராங், ரூபில்

* பௌத்த சமய கோட்பாடுகள் இலங்கையில் பட்டோலைகளில் ஆரம்பகாலத்தில் எழுதப்பட்டன. அது எந்த இடத்தில் எழுதப்பட்டதாக கூறப்படுகின்றது?

மாத்தளை அலுவிகாரை எனுமிடத்தில்

* பொம்பரிப்பு, இப்பன்கடுவ, மாந்தோட்டை, அலுலேன எனுமிடங்கள் எதனால் முக்கியத்துவம் பெற்றுள்ளன?

இலங்கையில் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் மனிதன் வாழ்ந்த இடங்கள்



* இலங்கையின் மத்திய வங்கி 1950 இல் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை வங்கி யாரால், அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது?

'என்ட்றூ கல்டேகொட்' என்பவரால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

* இலங்கையில் மிகக் குறுகிய காலம் நிர்வாக அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தவர் யார்?

டிகிரி பண்டா விஜயதுங்க



தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# உலகில் பிரபல்யமானவர்கள்

# தயான் சந்த்



இந்தியாவின் உத்தரப்பிரதேசம் அலகாபாத் நகரில் 1905 ஆம் ஆண்டு தயான் சந்த் பிறந்தார். இவர் தனது 16 ஆவது வயதில் இராணுவத்தில் சேர்ந்து அங்கேயே ஹொக்கி விளையாடவும் கற்றுக்கொண்டார். 1928 இல் அமெஸ்ரொடாமில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய ஹொக்கிக் குழுவில் இவர் இடம்பெற்றார். இப்போட்டியில் இந்திய குழு 28 கோல்கள் போட்டு தங்கப் பதக்கத்தை வெற்றி கொண்டது. இதில் 10 கோல்கள் தயான் சந்த் போட்டிருந்தார்.

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பின் தயான் சந்த் இராணுவத்தில் மேஜர் தரத்திற்கு உயர்வு பெற்றார். அவருக்கு இந்திய அரசு பத்மபூஷண் விருதை வழங்கிக் கௌரவித்தது. 1936 இல் பெர்லின் ஒலிம்பிக்கில் தயான் சந்த் ஒலிவ் முடிசூட்டிக் கௌரவிக்கப்பட்டார். ஒலிம்பிக் போட்டிகளில் 101 கோல்களும் ஏனைய போட்டிகளில் 300 கோல்களும் அடித்து இவர் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தயான் சந்த் ஹொக்கி மட்டையைக் கையாளுவதில் பெற்றிருந்த திறமையினால் 'ஹொக்கி மந்திரவாதி' என்ற பெயரையும் பெற்றிருந்தார். அவுஸ்திரேலியாவில் 1935 இல் தயான் சந்தின் ஆட்டத்தைப் [illegible] கிரிக்கெட் வீரர்களுள் ஒருவராக கருதப்படும் டாப் பிராட்மன் 'கிரிக்கெட்டில் ரன்கள் எடுப்பது போல ஹொக்கியில் இவர் கோல் அடிக்கிறார்' என்று வியப்புடன் கூறினார். இதேவேளை 1968 இல் மெக்சிக்கோ ஒலிம்பிக்கில் தயான் சந்த் கௌரவ அதிதியாகவும் கௌரவிக்கப்பட்டார். இவர் 1979 ஆம் ஆண்டு இறை எய்தினார்.

தொகுப்பு:
ஜுனைட் எம்.பஹ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை அமைக்க

| | | |
|---|---|---|
| | palpe | apple |
| | mleno | ----- |
| | erap | ---- |
| | yrehrc | ------ |
| | pmlu | ----- |
| | mlle | ---- |
| | gnoma | ----- |
| | eyrbsrtarw | ---------- |


A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக







குறுக்கெழுத்துப் போட்டி இல. 158




**மேலிருந்து கீழ்**

01. வரவு- எதிர்ச்சொல்.
02. முல்லைக்கு பாரி கொடுத்தது.
03. முதுகில் ஏற்படும் வளைவு. (தலைகீழ்)
04. முக்காலங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
05. குறைந்த அளவு என்பதைக் குறிக்கும்.
07. வீரர்களின் தொகுதி.
08. மூவேந்தர்களில் ஒருவர். (தலைகீழ்)


**இடமிருந்து வலம்**

01. வினாடி.
03. கெட்டியான திரவ உணவு வகை. (மாறியுள்ளது)
04. சந்திரன். (மாறியுள்ளது)
06. காவல் தொழில் செய்பவன்.
07. வெட்டப்பட்ட மரத்துண்டு. (குழம்பியுள்ளது)
08. பொலிவு. (மாறியுள்ளது)

குறுக்கெழுத்துப் போட்டி இல.157 விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | ப் | 2 பி | யா | 3 ச | ம் |
| டை | | ந் | | டை | 4 த |
| 5 யா | த் | தி | ரை | | க |
| ள | | | | | ர |
| ம் | 6 த | ர | 7 பா | 8 கா | 9 ம |
| | ரு | | தி | 10 து | |

நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னத்தில் தருக




அறிவுக்கு விருந்து (30.09.2015) விடைகள்








அடுத்து வர வேண்டியவை எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

இலங்கையின் வானியல் துறையின் வளர்ச்சி கருதி வானியல் தொடர்பாக பத்திரிகைகளில் தொடர்ச்சியாக கட்டுரைகளை வழங்கி வரும் வானியல் துறை எழுத்தாளர் அமல் உடவத்த அவர்களின் சேவையை கௌரவித்து பாராட்டு முகமாக அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 'சர்வதேச புத்தக கண்காட்சி-2015' இன் போது 'இலங்கை அறிவு வங்கி' யின் தலைவரும் வானியல்துறை விஞ்ஞானியுமான அநுர சீ பெரேராவினால் எழுத்தாளர் அமல் உடவத்த அவர்களுக்கு கண்கவர் 'வானியல்' ஞாபகார்த்த பரிசொன்று வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

இனிகலை முஸ்லிம் மகா வித்தியாலய ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'சிறுவர் சந்தை' நிகழ்வு ஒன்று அண்மையில் பாடசாலை முன்றலில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் பஸால் முஹம்மத் சந்தையை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். இந்நிகழ்வில் மாணவர்களிடம் பெற்றோர்கள் பொருட்களை வாங்குவதைப் படத்தில் காணலாம்.

(தகவல்: கே.ஏ.அலீம்)





அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ஐ.ராஜ்குமார்,
தெஹி/நூரி தமிழ் வித்., நூரி.



மெ.பு.சகாய பென்ஹனன்,
யா/புனித அந்தோனியார் கல்.,
ஊர்காவற்றுறை.



தே.ரொயிஸ்டன்,
கல்லுள்ள, மடுல்சீமை.



எஃப்.ஸாஜிதா,
கே/தெஹி/ சுலைமானியா
ம.வித்தியாலயம்.



எம்.நுஸ்ஹான்,
பறகஹதெனிய தே.பாட.,
பறகஹதெனிய.



ஜி.கிஷான்,
யதன்சைட் த.ம.வித்., கொட்டகலை.



என்.தாருகாஷினி,
வெளிமடை த.ம.வித்., வெளிமடை.



ச.சாந்த சொருபன்,
ஹோல்புறூக் த.ம.வித்.,
அக்கரைப்பத்தனை.



சி.சுவேத்தா,
வேம்படி மகளிர் உ.பாட.,
யாழ்ப்பாணம்.



எம்.ஆகாஷ் ராகுல்,
ஹைலண்ட்ஸ் கல்., ஹட்டன்.




எம்.ரிஸா மொஹமட்,
மேர்சி கல்வி வளாகம், மதுரங்குளி.

## புதிய மானிட புதைபடிமம்

தென் ஆபிரிக்காவின் ஜொஹன்னஸ்பர்க் நகரின் அருகில் உள்ள குகை ஒன்றில் விட்வட்ரஸ் ரோண்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் அமெரிக்காவை சேர்ந்த படிம மானுடவியலாளருமான பெகர் என்பவரின் தலைமையில் மனிதனை ஒத்த உயிரினத்தின் புதைபடிமங்கள் பல அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன.





அந்தவகையில், இப்பகுதியில் இருந்த ஆழமான நிலப் பகுதி ஒன்றில் இருந்து பதினைந்து உடற்பாக எலும்புகளும் மேலும் 1,500 படிம உறுப்புக்களும் கிடைத்துள்ளன. உலகில் நடைபெற்ற தொல்பொருள் அகழ்வுகளில் இந்த ஆய்விலேயே அதிகளவான மனித உயிரின புதைபடிமங்கள் கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சுமார் 1 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த புதிய மனித மூதாதையர்களின் படிமங்களே இவை என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கண்டுபிடிப்பானது, மனித பரிணாம வளர்ச்சியின் மிக முக்கிய கண்டுபிடிப்பாகவும் கருதப்படுகின்றது.



ஜெ.தனுஷியா,
அக்கரப்பத்தனை த.ம.வித்.,
அக்கரப்பத்தனை.



சுபீலா,
உடையார்கட்டு ம.வித்.,
உடையார்கட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரநிலம் ஓவியம் - 2016

## நாடளாவிய ஓவியப் போட்டி

2016 பெப்ரவரி 02 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக ஈரநில தினத்தையொட்டி மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து 'விஜய்' பத்திரிகையின் ஊடக அனுசரணையின் கீழ் நடத்துகின்ற சித்திரப் போட்டியில் பங்குபற்ற உங்களுக்கும் ஒரு வாய்ப்பு

இப்போட்டி தரம் 1, தொடக்கம் தரம் 13 வகுப்புகளை சேர்ந்த மாணவர்களுக்கும் மற்றும் பகிரங்கப் போட்டியாகவும் 12 பிரிவுகளின் கீழ் நடைபெறவுள்ளது. பகிரங்க போட்டியில் பங்குபற்றுவோருக்கு வயதெல்லை கிடையாது. பரிசு விபரங்கள் வருமாறு;

### பாடசாலை பிரிவு

முதலாம் இடம் - ரூபா 20,000
இரண்டாம் இடம் - ரூபா 15,000
மூன்றாம் இடம் - ரூபா 10,000

### பகிரங்கப் பிரிவு

முதலாம் இடம் - ரூபா 25,000
இரண்டாம் இடம் - ரூபா 20,000
மூன்றாம் இடம் - ரூபா 15,000

முதலாவது இடத்தை வெற்றியீட்டுகின்றவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுடன் தேசிய வனவிலங்குகள் பூங்காவில் உள்ள பங்களாவில் இரண்டு நாட்களை கழிப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்படும் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

இறுதிப் போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பணப்பரிசும் மற்றும் சான்றிதழ்கள் உட்பட பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

### சித்திரங்களுக்கான தலைப்புகள்

#### தரம் 1, 2

* நான் கண்ட ஈரநிலம்
* ஈரநிலத்தின் அழகு
* ஈரநில சூழலில் வாழ்கின்ற விலங்குகள் மற்றும் பறவைகள்
* ஈரநிலத்தை பாதுகாப்போம்

#### தரம் 3, 4, 5

* ஈரநிலத்தின் அழகு
* கடல் சார்ந்த கண்டல் நிலம்
* ஈரநில சூழலில் வாழ்கின்ற விலங்குகள் மற்றும் பறவைகள்
* நன்னீர் சேற்று நிலம்
* முருகைக் கற்கள் கொண்ட கடல்
* ஈரநிலத்தை பாதுகாப்போம்

#### தரம் 6, 7, 8

* கண்டல் தாவரங்களை பாதுகாப்போம்
* சேற்று நிலங்களை பாதுகாப்போம்
* காடொன்றில் நீர் கொண்ட குளம்
* களப்பொன்றின் அழகு
* ஈரநிலத்தை பாதுகாப்போம்
* ஈரநிலம் பயன்மிக்கவை

#### தரம் 9, 10, 11

* நன்னீர் கொண்ட ஈரநிலம்
* ஆற்று வாயின் அழகு
* நான் கண்ட சேற்று நிலம்
* ஈரநிலத்தை பாதுகாப்போம்
* ஈரநிலம் இன்றியமையாதவை, பயன்மிக்கவை
* உவர்நீர் கொண்ட ஈரநிலம்

#### தரம் 12, 13

* ஈரநிலத்தை காப்பது சுற்றாடலை காப்பதாகும்
* சேற்று நிலத்தில் மண்நிரப்புவதால் சுற்றாடல் அழிந்து போகும்
* கண்டல் தாவரங்கள் கொண்ட சூழல் கடலரிப்பை தடுக்கும்
* தேசிய வனவிலங்குகள் பூங்காவில்/சரணாலயத்தில் உள்ள ஈரநிலம்
* ஈரநிலம் முக்கியத்துவம் மிக்கது, பயன்மிக்கது
* ஈரநிலத்தை பாதுகாப்போம்

#### பகிரங்கப் பிரிவு

* ஈரநிலம் வளம்மிக்கதாகும்
* ஈரநிலம் பயனற்ற நிலம் அல்ல
* ஈரநிலம் முக்கியத்துவம் மிக்கது, பயன்மிக்கது

### போட்டி நிபந்தனைகள்

இங்கு வழங்கப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்ப முடியும். வரையப்படும் சித்திரம் 18X14 அங்குலம் அளவில் இருத்தல் வேண்டும். பெஸ்டல் அல்லது நீர்ச்சாயம் போன்ற கைகளில் படிந்துவிடாத எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தலாம்.

* முதல் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவுசெய்யப்படுகின்ற வெற்றியாளர்கள் நடுவர் குழுவொன்றின் முன்னிலையில் ஈரநில நேரடிக் காட்சியொன்றை சித்திரமாக வரைவதற்கு பணிக்கப்படுவர்.
* சித்திரத்தின் பின்புறம் போட்டியாளரின் பெயர், பாடசாலை முகவரி, வகுப்பு, பிறந்த திகதி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், மாவட்டம், மாகாணம், கையொப்பம் ஆகிய விபரங்களுடன் பாடசாலை அதிபர் அல்லது இத்துறைசார் ஆசிரியர்கள் அல்லது வகுப்பாசிரியர் ஆகியோரில் ஒருவரது உறுதிப்படுத்தலுடன் கீழ்காணும் முகவரிக்கு தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நேரிலும் ஒப்படைக்கலாம்.
  ( உங்கள் விபரங்களை தெளிவாக எழுதவும். ஆங்கிலத்திலும் எழுதினால் நல்லது)
  பகிரங்கப் பிரிவில் போட்டியிடுவோர் தலைப்பு, பெயர், முகவரி, மாவட்டம், மாகாணம், தொலைபேசி இலக்கம், கையொப்பம் ஆகியவற்றுடன் தமது படைப்பை அனுப்புதல் வேண்டும்.
* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்

### போட்டி முடிவு திகதி 2015 நொவெம்பர் 13

வெற்றியீட்டுவோருக்கு தேசிய ஈரநில தினமான 2016 பெப்ரவரி 02 ஆம் திகதியன்று நடைபெறும் வைபவத்தின்போது மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் கரங்களினால் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

#### அனுப்ப வேண்டிய முகவரி

ஈரநில ஓவியம் - 2016
இயற்கை வள முகாமைத்துவ மற்றும்
மீளாய்வுப் பிரிவு
மத்திய சுற்றாடல் அதிகார சபை,
இல 104, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

#### மேலதிக விபரங்களுக்கு

கே.பிரபாகரன்.
தொலைபேசி எண்: 0710164820 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்

HNB
ලංකා ජලනි
லங்கா ஜலனி
Lanka Jalani
SMALL FISHERS FEDERATION - SUDEESA - SRI LANKA

உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs.10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeya newspapers
helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror
www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோலார் பவர் பைக்

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத சோலார் பைக்குகளை தயாரிக்க பல நிறுவனங்கள் முயற்சி செய்து வருகின்றன. அந்தவகையில், புதிய வகை சோலார் பைக் ஒன்று பாவனைக்கு வந்துள்ளது. பெட்ரோல் அல்லது மின்சார பற்றரிகளால் இயங்கும் மோட்டார் சைக்கிள்களுக்கு மாற்றாக இதைப் பயன்படுத்தலாம்.


இந்த வாகனத்தின் சக்கரம் அமைந்துள்ள பகுதியில் சோலார் பேனல்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதன்மூலம் சேகரிக்கப்படும் சூரிய சக்தி, மின்சாரமாக மின்கலத்தில் சேமிக்கப்படுகிறது. ஒரு முறை முழுமையாக சார்ஜ் ஏறினால் 70 கிலோ மீற்றர் தூரம் வரை பயணிக்கலாம். இந்த வாகனம் மணிக்கு 50 கி.மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது.

# டெப்லெட் 'ஸ்டேண்ட்'





'டெப்'பை (Tab) மிகச் சுலபமாக கையாள இந்த ஸ்டேண்ட் பயன்படு கிறது. பல்வேறு அளவுகளில் இருக் கும் டெப்லெட்டுகளுக்கு ஏற்ப இதை சரிபடுத்திக்கொள்ளலாம். இந்த ஸ்டேண்டில் எந்தக் கோணத்தி லும் டேப்லெட்டை பொருத்திக் கொள்ள முடியும் என்பதும் இதன் சிறப்பம்சமாகும்.

# ஓவியம் வரைவோம்



# தாய்வான்

சீனாவின் தென்மேற்கு திசையில் அமைந்துள்ள தாய்வான் விவசாய பொருளாதாரத்தையும் கைத்தொழில் பொருளாதா ரத்தையும் உருவாக்கியதோர் நாடாகும். சீனர்கள் வாழும் இந்நாடு ஜப்பானின் ஆட்சியின் கீழ் இருந்து இரண்டாம் உலக யுத்தத்தின் பின் சீனாவின் ஆட்சியின் கீழ் வந்தது. அதன்பின் 1947 முதல் சீனாவின் தலையீட்டுடன் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின்படி ஜனநாயக ஆட்சி நிலவுகின்றது.







-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லமாக... நாய்க்குட்டி வளர்ப்போருக்கு சின்னஞ்சிறு ஆலோசனைகள்



அநேகமானோர் வீடுகளில் செல்லப் பிராணிகளாக நாய்களை வளர்ப்பதுண்டு. இப்படி நாய்களை செல்லப் பிராணிகளாக வளர்க்க விரும்புகின்றவர்கள் நாய்க் குட்டிகளை வளர்க்கும்போது கைக்கொள்ள வேண்டிய சில வழிமுறைகள் உள்ளன. அவை எவை என்பதை இங்கு பார்ப்போம்.

## உரிய இடத்தை ஒதுக்குங்கள்

செல்லப் பிராணியொன்றை வீட்டுக்கு கொண்டு வருவதானது, அக்குடும்பத்திற்கு இன்னொரு உறுப்பினர் சேர்ந்த மகிழ்ச்சியைத் தந்தாலும், குறித்த நாய்க் குட்டிக்கென தனிப்பட்ட இடமொன்றை அமைத்துக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். சந்தையில் இதற்கென நவீன ரகத்திலான பொருட்கள் இருந்தாலும் அவை கட்டாயம் என்றில்லை. இதற்கு பழைய 'கார்ட்போர்ட்' பெட்டியொன்றே போதுமானது.



## உள்நுழையவும், வெளியேறவும் வசதியாக அமையவேண்டும்

இந்த 'கார்ட்போர்ட்' பெட்டியை வீட்டில் பொருத்தமான ஒரு இடத்தில் வையுங்கள். இந்த பெட்டிக்குள் எந்தவொரு இடைஞ்சலும் இல்லாமல் நுழையவும், வெளியேறவும் வசதியான பகுதியொன்றை அமைக்கவும். இதனுள் பழைய உடுதுணிகளை தொகையாக கீழே பரப்பிவிட்டு அதன்மீது நாய்க்குட்டியைக் கிடத்தவும். இது அந்த நாய்க்குட்டி சொகுசாக இருப்பதற்கு வசதியாக இருக்கும்.

நாய்க்குட்டியை தாய் நாயிடமிருந்து பிரித்தெடுக்கும்போது தாய் நாயிடம் வைக்கப்பட்டிருந்த பழைய உடுதுணியை எடுத்துக் கொள்வது நன்றாக இருக்கும். அந்த பழைய துணியில் தாய் நாயின் வாடை பட்டிருக்கலாம் என்றபடியால் குட்டி நாயின் தனிமை உணர்வை, அழுத்தத்தை தவிர்ப்பதற்கு அதன் தாய் நாயின் வாடையை கொடுப்பதற்கு இந்த துணி உபயோகமாக இருக்கும்.





## சுத்தம்-வெளிச்சம் இருத்தல் வேண்டும்

நாய்க் குட்டி வைக்கப்பட்டுள்ள கார்ட்போர்ட் பெட்டியானது, சுத்தமாக இருப்பதுடன், அதற்குள் போதிய வெளிச்சம் ஏற்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும். அடிக்கடி குட்டியின் மலம், சிறுநீர், ஆகியவற்றை நீக்கி சுத்தப்படுத்தல் வேண்டும். இதன்மூலம் தொற்றுக் கிருமிகளின் தாக்கத்திலிருந்து நாய்க் குட்டியை பாதுகாக்க முடியும்.

மேலும், இரவு நேரங்களில் சாப்பிடுவதற்கென வைக்கப்படும் உணவையும், குடிநீரையும் நாய்க் குட்டி இலகுவாக கண்டுகொள்வதற்கு வசதியாக சிறிதான ஒரு வெளிச்சத்தை ஏற்படுத்தி வைத்தல் நல்லது. நாய்க்குட்டி ஓரளவு வளர்ந்ததும், வீட்டிற்கு வெளிப்புறமாக ஓர் இடத்தில் அதற்கான இருப்பிடத்தை அமைத்துக் கொடுங்கள். அந்த இடமானது, அதற்கு சுதந்திரமாக திரியக்கூடியதும் சூரிய வெளிச்சமும் காற்றோட்டமும் போதிய அளவில் உள்ள இடமாகவும் அது அமைதல் வேண்டும். இன்னும் சிறிது நாட்களில் நாய்க்குட்டி மேலும் வளர்ந்ததும் அதற்கு விளையாடுவதற்கென சிறிய விளையாட்டுப் பொருட்களையும் வழங்குங்கள். இது அவற்றின் தனிமையைப் போக்குவதுடன், அதன் வளர்ச்சிக்குத் தேவையான உடற்பயிற்சிக்கான உந்து சக்தியாகவும் அமையும்.

# சிறு ர்களுக்கான இை ணயத்தளங்கள்

இணையத்தளங்கள் (website) இன்று உலகெங்கிலும் அநேகமான பாவனைகளுள் ஒன்றாக இருந்து வருகின்றது. இதில் சிறுவர்களுக்கென பிரத்தியேகமான சில இணையத்தளங்கள் இருப்பதை உங்களில் எத்தனைபேர் அறிந்திருப்பீர்கள்? ஆம்! சிறுவர்களுக்கென்றே அமைக்கப்பட்ட இந்த இணையத்தளங்களினூடாக, கல்விசார் அம்சங்கள் பலவற்றை நீங்கள் பெற்றுக்கொள்ளவும் முடியும். அத்தகைய சில இணையத்தளங்களின் விபரங்கள் இங்கு வழங்கப் பட்டுள்ளன.



## Kidsmart

லண்டனிலிருந்து செயல்படும் இந்த இணையத்தளம் குழந்தைகளுக்கு இணையம் தொடர்பான பல்வேறு விடயங்களை கற்றுத்தருகின்றது. செட்டிங் (chating), சோசியல் நெட்வொர்க் தளங்கள், இணையப் பாதுகாப்பு என்று இன்னும் நிறைய விசயங்களை சின்னஞ்சிறு துணுக்குகளாக இந்த இணையத்தளம் வழங்குகின்றது.

இணையத்தள முகவரி: http://www.kidsmart.org.uk/

## National Geographic Kids

அமெரிக்காவிலிருந்து செயல்படும் அறிவியல், கல்வி அமைப்பான The National Geographic Society எனும் நிறுவனம் (National Geographic தொலைக்காட்சி இவர்களுடையதுதான்) குழந்தைகளுக்காக நடத்தும் தளம் இது. அறிவியல், உயிரினங்கள் போன்ற பல விடயங்களை இந்த இணையத்தில் இருந்து சிறுவர்கள் கற்றுக்கொள்ளலாம்.

இணையத்தள முகவரி: http://kids.nationalgeographic.com/kids/

## Kids Health

மருத்துவம் பற்றிய அரிய தகவல்களை சிறுவர்களுக்கு வழங்கும் தளம் இது. 'மூட்டைப்பூச்சி கடித்தால் என்ன செய்ய வேண்டும்?', 'நமது உடல் பாகங்கள் எவ்வாறு செயல்படுகின்றது?' என்று பல்வேறு விடயங்கள் இதில் இருக்கின்றன.

இணையத்தள முகவரி: http://kidshealth.org/kid/

## Busy Bee Kids Crafts

சிறுவர்களும் கைத் தொழில்கள் செய்யக் கற்றுக்கொடுக்கும் தளம் இது. (Craft என்றால் கைத்தொழில் என்று கூகுள் அர்த்தப்படுத்துகின்றது)

இணையத்தள முகவரி: http:/www.busybeekidscrafts.com/

## Nasa kids

விண்வெளி சம்பந்தமான பல்வேறு தகவல்களை சிறுவர்களுக்கென திரட்டித் தரும் 'நாஸா' விண்வெளி நிலையத்தின் தளம் இது.

இணையத்தள முகவரி: http://www.nasa.gov/audie.../forkids/kidsclub/flash/index.html

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகளைக் கழுவி சுத்தம் பேணுவோம்

**நா**ம் ஆரோக்கியமாக இருப்பதற்கு சத்தான உணவுகள் எந்தளவுக்கு அவசியமோ, அந்தளவுக்கு நாம் சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதும் அவசியம். எம்மில், 80 சதவீத தொற்று நோய்கள் ஏற்படுவதற்கு பிரதான காரணம், கைகளின் சுத்தமின்மையே ஆகும். உடல் உறுப்புகளில் அதிக கிருமிகள் இருக்க வாய்ப்புள்ள இடமும் கைகள்தான். எனவேதான், கைகளின் சுத்தம் பற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 2008 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதியை 'உலக கை கழுவும் தினம்' ஆக உலக சுகாதார நிறுவனம் பிரகடனப்படுத்தி, ஒவ்வொரு வருடமும் அனுஷ்டித்து வருகின்றது.

### எப்போதெல்லாம் கை கழுவ வேண்டும்?

- உணவு சமைக்கும் முன்
- குழந்தைகளுக்கு உடை மாற்றிய பின்
- நோயாளிகளுக்கு உணவுப் பொருட்கள் வாங்கிச் செல்வதற்கு முன்
- மருத்துவமனையில் நோயாளியைப் பார்த்துவிட்டுத் திரும்பிய பின்னர்
- வெளி இடங்களுக்கு சென்று வந்த பின்னர்


1. கையை நனைத்து, சவர்க்காரமிட்டு தேய்க்கவும்


2. கை விரல்களைக் கோர்த்து தேய்க்கவும்


3. கைகளின் வெளிப்பகுதி (பின்புறமாக) தேய்த்தல்


4. வலது/இடது பெருவிரல்களை தேய்த்தல்


5. விரல்களின் பின்புறங்களை தேய்க்கவும்


6. விரல் நகங்களைத் தேய்க்க வேண்டும்


7. மணிக்கட்டுப் பகுதிகளை கழுவுதல்


8. கைகளை நீரில் நன்கு கழுவி, சுத்தமாக துடைக்க வேண்டும்

### கைகளைக் கழுவ வேண்டிய மேலும் சில சந்தர்ப்பங்கள்


கழிவறை சென்று வந்த பின்னர்


தும்மிய பின்னர்/ இருமலின் பின்னர்


செல்லப் பிராணிகளுடன் விளையாடிய பின்னர்


விளையாடிய பின்னர்


உணவு உண்ணும் முன்/குழந்தைக்கு உணவு ஊட்டும் முன்



ஒக்டோபர் 15: உலக கை கழுவும் தினம்

## தேசிய மலர்கள்

**உ**லக நாடுகளின் தேசிய மலரானது, அந்தந்த நாடுகளின் சமய, கலாசார, வரலாற்று முக்கியத்துவங்களைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. உலக நாடுகள் சிலவற்றின் தேசிய மலர்கள் பற்றி அறிந்துகொள்வோம்.

- இலங்கை - நீல அல்லி
- இந்தியா, எகிப்து, வியட்நாம் - தாமரை
- பாகிஸ்தான் - மல்லிகை
- அவுஸ்திரேலியா - கோல்டன் வெட்ல்
- சீனா - ப்ளம் ப்ளொசம்
- ஜப்பான் - க்ரிசாந்திமம், சகுரா
- இங்கிலாந்து, ஈராக், ஐக்கிய அமெரிக்கா, ஈரான் - ரோஜா
- ஜேர்மனி - நீல சோளப்பூ
- பிரான்ஸ் - ஐரிஷ்
- பங்களாதேஷ் - நீரல்லி (வெள்ளை அல்லி)
- ரஷ்யா - வெள்ளை சாமந்தி
- பெல்ஜியம் - வெள்ளை பொப்பி
- பூட்டான் - நீல பொப்பி
- ஸ்பெய்ன் - சிவப்பு கார்னேஷன்
- இத்தாலி - லிலி
- சுவிற்சர்லாந்து - இடல்வீஸ்


கோல்டன் வெட்ல்


நீல சோளப்பூ


தாமரை


இடல்வீஸ்


நீல அல்லி


ரோஜா

## ஜப்பானில் ஆடம்பரப் பழங்கள்

**பொ**துவாக பழங்கள் என்றால் அவை குறிப்பிட்ட சில வடிவங்களில்தான் இருக்கும். ஆனால், இதய வடிவம், பிரமிட் வடிவம், சதுர வடிவம் போன்ற வடிவங்களிலான பழங்களைப் பார்த்திருக்கிறீர்களா?

ஜப்பான் நாட்டுக்குச் சென்றால் இந்த வடிவங்களிலான பழங்களை வாங்கக் கூடியதாக இருக்கும். ஜப்பானில் உறவுகளுக்கிடையே பருவ கால மற்றும் ஆண்டிறுதியில் பரிசுகளைக் கைமாற்றிக்கொள்வது வழக்கம். அத்தகைய பரிசுகளாக பழங்களையும் வழங்குவதுண்டு. எனவே, இக்காலங்களில் பழங்களை அவற்றின் இயற்கை தோற்றங்களிலிருந்து மாற்றி, விற்பனை செய்வது ஜப்பானில் ஃபெஷன் போன்றாகிவிட்டது. பழங்களை ஒவ்வொரு வடிவத்திலான கொள்கலன்களில் அடைத்து வைத்து





வளர்த்தே, இவ்வாறு புது வடிவங்களிலான பழங்களைப் பெறுகின்றனர்.

இத்தகைய பழங்களை 'ஆடம்பரப் பழங்கள்' என குறிப்பிடுகின்றனர். சாதாரண பழங்களின் விலையைவிட, தோற்றம் மாற்றப்பட்ட பழங்களின் விலை பன்மடங்கு அதிகமாகும்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதியிலுள்ள விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தினரால் 2015, ஒக்டோபர் 14 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 14, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org